விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 239 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 30 செவ்வாய்க்கிழமை (15.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


## சமஷ்டியில்தான் தமிழர்களுக்கு தீர்வு மாகாண தேர்தலுடன் 13ஐ அமுலாக்குக

### சம்பந்தன் ஜனாதிபதிக்கு கடிதம்



(கொழும்பு)

சமஷ்டி அடிப்படையில்தான் தமிழர்களுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டும். மாகாண சபைத் தேர்தலுடன் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுலாக்க வேண்டும் என இரா.சம்பந்தன் ஜனாதிபதிக்கு நேற்று கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

“சமஷ்டிக் கட்டமைப்பிலேயே அர்த்தமுள்ள எந்தத் தீர்வும் சாத்தியம் என்ற நிலைப்பாட்டில் வேறு சமரசம் அல்லது விட்டுக் கொடுப்புச் செய்து கொள்ளா

15

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

# நாட்டுக்கு எதிராக செயற்பட முடியாது

### எச்சரிக்கை தொனியில் நாமல் எம்.பி



(கொழும்பு)

நாட்டுக்கு எதிராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்பட முடியாது. அரசியல் தீர்மானங்களை நாட்டுக்கு எதிராக எடுத்தால் அதனை கடுமையாக எதிர்ப்போம் என பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண சபை தேர்தலை நடத்துக

### ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக பேசும் முன்னர், மாகாண

16

## நெற்பயிர்களை தீயிட்டால் நட்டஈடு இல்லை

(கொழும்பு)

வறட்சியினால் சேதமடைந்த நெற்பயிர்களை தீயிட்டு எரித்தால், பயிர் சேதங்களுக்கான நட்டஈடு வழங்கப்பட மாட்டாது என விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை, விவசாய அமைச்சுக்கு

15

### நீதிமன்ற அனுமதியுடன் நடைபெறும்

## குருந்தூர்மலை பொங்கலுக்கு அனைவரையும் அணிதிரள அழைப்பு

(முல்லைத்தீவு)

நீதிமன்ற அனுமதியுடன் குருந்தூர்மலையில் இடம்பெற இருக்கும் பொங்கல் நிகழ்வுக்கு அனைவரையும் வருமாறு ஆலய பொங்கல் உற்சவ குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு பொங்கல் நிகழ்வு நடைபெறவுள்ளதாகவும் குறித்த பொங்கல் நிகழ்வுக்கு அனைவரையும்அணி

15

### கோப்பாயில் விபத்து

## சமுர்த்தி வங்கி முகாமையாளர் பலி



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் சந்தியில் நேற்று திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - டிப்பர் விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் சமுர்த்தி வங்கியின்

15

## விஷ ஜந்து தாக்கியதில் மன்னாரில் இளைஞன் மரணம்



(மன்னார்)

விஷ ஜந்து தாக்கியதில் மன்னாரில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் ஜெகநாதன்டிரோன் (வயது-28) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் மன்னார் கத்தோலிக்க ஊடகத்தின் இணையத் தொகுப்பாளராவார்.

15

## நாட்டின் வளமும் சொத்தும் யாருடைய தனிச் சொத்தும் அல்ல

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

நாட்டின் வளங்களும் சொத்துக்களும் யாருடைய தனிச் சொத்தும் அல்ல என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில்உள்ள அனைத்தும் ஏலம் விடப்படுவதாக

16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 23 . 12 . 1923

மறைவு 16 . 08 . 2010

அமரர்

## சண்முகம் விஸ்வநாதர் முருகேசு

S.V.M என்ற மூன்றெழுத்தால் எவ்வுலகிலும்
அறியப்பெற்ற ஏந்தலே!
ஆண்டுகள் பதின்மூன்று ஆனாலும்
ஐயா! உங்கள் நினைவிலேயே நாமின்றும்!

தமிழினத்தின் அடையாளமாய்
காரைநகரின் நிமிர்வாய்
வர்த்தக உலகின் வைரமாய்
அற உலகின் ஆணி வேராய்
ஆன்மீக உலகின் காவலனாய்

உழைப்பில் ஓங்கிய வடிவமாய்
யாழ்ப்பாணத்தின் பொருளாதார அடையாளமாய்
விளங்கியதே S.V.M என்ற மூன்றெழுத்தே!
வழமோங்க வாழ வழி செய்த
வள்ளலே உங்கள் வழி நிற்போம்.

குடும்பத்தினர்

(16717)

**உரிமையாளர், பணியாளர்கள்**

**SVMURUGESU**- 154, Hospital Road, Jaffna.
**S.V.M (PVT) LTD** - 122, Dam street, Colombo - 12.
**SVMURUGESU ( PVT) LTD** - 106, Hospital Road, Jaffna.
**S.V.M. DISTRIBUTORS ( PVT) LTD** - 160, Stanley Road, Jaffna.
**SVM FUEL MART** - 173, 175, Palaly Road, Thirunelvely, Jaffna.
**S.V.M. ENTERPRISE (PVT) LTD** - 288, A9 Road, Karadipokku, Killinochi.
**S.V.M Ricemill** - Station Road, Chunnakam.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்ட செஞ்சோலைப் படுகொலையின் நினைவேந்தல்





செஞ்சோலைப் படுகொலையின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று முல்லைத்தீவு - வள்ளிபுனம் பகுதியில் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

படுகொலைச் சம்பவத்தில் உயிரிழந்த மாணவியர்களுக்கும் பணியாளர்களுக்கும் அவர்களுடைய உறவினர்களால் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, மலர்மாலை அணிவிக்கப்பட்டு, மலர்தூவி, கண்ணீர் சொரிந்து அஞ்சலி செலுத்தப்பட்டது. இந் நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், படுகொலைசெய்யப்பட்டவர்களின் உறவுகள், பொதுமக்கள்எனப்பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-299)

## மீண்டும் எம் கையில் ஆயுதங்களை திணிக்க நினைக்கிறார் மேர்வின் சில்வா

### சிறீதரன் எம்.பி ஆவேசம்



(கிளிநொச்சி)

பௌத்த விகாரைகளை தமிழர்கள் பிடுங்கிக் கொள்ளப் போவதாகவும் அதை தான் காப்பாற்றப் போவதாகவும் சிங்கள மக்களுக்கு காட்டி பெரிய அரசியலொன்றை செய்யலாம் என மேர்வின் சில்வா கருதுவதாக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இது பலிக்காது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தான் வடக்கு, கிழக்கிற்கு செல்வதாகவும் அங்கே விகாரைகள் மற்றும் பிக்குகள் மீது கை வைக்க முயன்றால் அங்குள்ளவர்களின் தலைகளுடனேயே களனிக்கு திரும்புவதாகவும் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் சிறீதரன் எம்.பி பதிலளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 1985 இல் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கொடுத்த செவ்வியொன்றில் கூட "நாங்கள் ஆயுதங்களை விரும்பி தூக்கவில்லை. எங்களுடைய மக்களின் பாதுகாப்பிற்காக ஆயுதங்கள் எங்கள் கைகளில் திணிக்கப்பட்டது" என்று கூறினார்.

ஆகவே மீண்டும் ஆயுதங்களை.எங்களுடைய கைகளில் திணிக்க வேண்டுமென மேர்வின் சில்வா போல, சரத் வீரசேகர போல, விமல் வீரவன்ச போல ஆட்கள் நினைக்கின்றார்கள் என்றால் அப்படியொரு சந்தர்ப்பத்தை நாங்கள் சந்திக்க தயாராக இருக்கின்றோம்.

அவர்கள் தலையை கொய்தால் நாம் கைகட்டி வேடிக்கை பார்ப்போம் என்று மேர்வின் சில்வா கருதுவது இந்த நவீன உலகத்திற்கு பொருந்துமா என்பதை காலம் தான் தீர்மானிக்க வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

## செஞ்சோலை படுகொலை நினைவேந்தல் யாழ்.பல்கலையிலும் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் நேற்று திங்கட்கிழமை செஞ்சோலைப் படுகொலையின் 17 ஆவது ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது பல்கலைக்கழக மாணவ.மாணவியர்கள் பலரும் உயிர்நீத்த உறவுகளுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தியிருந்தனர். (நி-5-6-30-33)



## மருதமடு ஆலய திருவிழாவில் ஜனாதிபதி ரணில் பங்கேற்பு

(மன்னார்)

மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா திருப்பலி இன்று செவ்வாய்க் கிழமை காலை 6.15 மணிக்கு திருத்தந்தையின் பிரதிநிதி தலைமையில் ஆயர்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்க உள்ளனர்.

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல இலட்சக்கணக்கான யாத்திரிகர்கள் மடு திருத்தலத்திற்கு வருகை தந்துள்ளனர். இம்முறை நாட்டின் பல பாகங்களில் இருந்தும் சுமார் 7 லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொள்ள உள்ள நிலையில் வருகை தரும் பக்தர்களின் நலனை கருத்திக் கொண்டு சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் இன்ற்றயதினம் மடு திருவிழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்ள உள்ள நிலையில் விசேட பாதுகாப்புக்களும் பலப்படுத்தப்பட்டுள்ளன. (நி-5-6-285)

## இராணுவ முகாமை அகற்ற வேண்டாம்; கற்கோவளம் பகுதியில் மக்கள் கவனயீர்ப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் உள்ள இராணுவ முகாமை அகற்ற வேண்டாம் எனத் தெரிவித்து பிரதேச மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் . ஈடுபட்டனர்.

இராணுவ முகாமுக்கு முன்பாக நேற்று காலை குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இதன்போது பொலிஸார் மீது நம்பிக்கை இல்லை எனவும் குறித்த பகுதியில் இடம்பெறும் மண் கடத்தல், கஞ்சா கடத்தல் உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த இராணுவத்தினரின் உதவி தேவை என போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்ட இராணுவ தளபதி கற்கோவளம் பகுதியில் அமைந்துள்ள 4 ஆவது சிங்க றெஜிமென்ட படையணி இராணுவ முகாமை அகற்ற வேண்டாம் எனக் கோரி குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் இந்த பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-6-33)



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட உடையார்கட்டு பகுதியில் வாழ்கின்ற பொதுமக்களுக்கு கிளிநொச்சி, முல்லைத்தீவின் படை முகாம்களின் தளபதியின் ஏற்பாட்டில் 68 ஆவது படைப்பிரிவினர் மேஜர் ஜென்ரல் சேனக கஸ்தூரிமுதலியால் கண் பார்வையற்றவர்களுக்கான கண்பரிசோதனை முகாம் நேற்று முன்தினம் உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. (படம்-தேவானந்தன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடினப்பந்து கிரிக்கெட் போட்டி; யுனைட்டட் அணி வெற்றி



அமரர் சிந்துசன் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரின் நிதி அனுசரணையுடன் தருமபுரம் இளந்தாரகை விளையாட்டுக் கழகம் நடத்திய மாபெரும் கடினப்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் யுனைட்டட் அணி வெற்றி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் தருமபுரம் இளந்தாரகை அணியும் யுனைட்டட் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இளந்தாரகை அணியினர் முதலில் துடுப்பாட்டத்தினை தேர்வு செய்தனர்.

இளந்தாரகை வீரர் அரைச்சதத்தின் உதவியுடனும் பண்டாவின் இறுதிநேர அதிரடியின் உதவியுடனும் 10 ஓவர்கள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 105 ஓட்டங்களை குவித்தனர்.

அணி சார்பில் அதிகபட்சமாக மகேந்திரன் நித்தேஸ் 29 பந்துகளில் 52 ஓட்டங்களையும் பண்டா 3 பந்துகளில் 16 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். யுனைட்டட் அணியின் பந்து வீச்சில் பிரதி 2 இலக்குகளையும் சுபி மற்றும் பிரியன் தலா ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

106 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய யுனைட்டட் அணியினர் 10 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 92 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர். அணி சார்பில் அதிகபட்சமாக முல்லை 28 ஓட்ட ங்களையும் தானுஜன் 26 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். இளந்தாரகை அணியின் பந்து வீச்சில் அனுபவ வீரர் யோகீசன் 3 இலக்குகளையும் பண்டா 2 இலக்குகளையும் நிரோசன் ஒரு இலக்கினையும் வீழ்த்த முடிவில் 13 ஓட்டங்களால் இளந்தாரகை அணியினர் வெற்றியீட்டினர். போட்டியின் ஆட்டநாயகனாக துடுப்பாட்டத்தில் அரைச்சதம் கடந்த நித்தேஸ் தெரிவானார். தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக இளந்தாரகை அணியின் ரொபட் தெரிவு செய்யப்பட்டதுடன் சிறந்த பந்து வீச்சாளராக இளந்தாரகை அணியின் பண்டா ஆகியோர் தெரிவானார்கள். (6-316)



மத்தொனி இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்திய அமரர் மணிமாறன் ஞாபகார்த்த தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் கரவெட்டி மகேசன் விளையாட்டுக் கழகம் சம்பியனாக தெரிவானது. இரண்டாம் இடத்தை ஜங்கரா அணி பெற்றுக் கொண்டது.

(படம்-மகாலிங்கம்)

# இந்தியாவுக்கு எதிரான இருபது-20 தொடரை கைப்பற்றியது மே. இந்திய தீவுகள்




மேற்கிந்திய தீவுகள்-இந்திய அணிகளுக்கு இடையேயான 5 ஆவது மற்றும் கடைசி இருபது -20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற இந்தியா பட்டிங்கை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் பட்டிங் செய்த இந்திய அணி 20 ஓவர் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 165 ரன்கள் எடுத்தது.

இதனையடுத்து களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி 18 ஓவரில் 2 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து 171 ரன்கள் எடுத்தது. 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதன் மூலம் இருபது-20 தொடரை 3-2 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது. 17 ஆண்டுகளுக்கு பின் இந்திய அணியை ஒரு தொடரில் வீழ்த்தி மேற்கிந்திய தீவுகள் அணி சாதனை படைத்துள்ளது.

மேலும் கடைசி 12 இருபது -20 தொடர்களில் ஒன்றில் கூட இந்திய அணி தோல்வியடையாமல் இருந்து வந்த நிலையில், முதல் முறையாக ஹர்திக் பாண்டியா தலைமையிலான இந்திய அணி தோல்வியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)




வித்தியா




சத்துரங்க

ஆடியில ஒன்னுவாங்குனா இன்னொன்னு ஃப்ரீன்னு விளம்பரம் ஓடுது...

ஆடியில ஏன் கல்யாணம் பண்ணக்கூடதுன்னு ஏன் நம் முன்னோர்கள் சொல்லி வச்சிருக்காங்கன்னு இப்பப் புரியுது...

12:03

நசீர்

நிருபர்- பால் வியாபாரம் பண்ணி குறுகிய காலத்துல பெரிய லட்சாதியாயிட்டீங்க. உங்க தொழில் ரகசியம் என்ன சார்?

முருகேசு:நாலே நாலு பாயின்ட்தான் சார்.

1.மாட்டுக்கு நல்ல பச்சை புல்லு குடுக்கனும் சார்.

2.அப்புறம் விடியக் காலையிலயே பாலைக் கறந்துடனும்.

3.பாலில நாலுக்கு ஒரு பங்கு தண்ணி ஊத்திக்கலாம்

4.இதெல்லாத்தையும் விட பாலைக் கறக்கும் போது மாட்டுக்கு சொந்தக்காரங்க கண்ணுல அகப்பட்டுடக் கூடாது.

தத்விதா




யஷ்வினி




நிலானி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடிகளுக்கு மத்தியில் நட்டஈடு வழங்குவதில் சிக்கல்

## விவசாய அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் நீரை வழங்கியிருந்தால் பல ஏக்கர் வயல் நிலங்களை பாதுகாத்திருக்க முடியும். இருப்பினும் அதிகாரிகளின் இழுபறிகளால் அப்பாவி விவசாயிகளுக்கு அவல நிலை ஏற்பட்டு. நாட்டில் உணவு உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகள் நட்டஈட்டை எதிர்பார்க்கின்றனர். நெருக்கடிகளுக்கு மத்தியில் நட்டஈட்டை வழங்குவதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை பகுதியில் நீரின்றி பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கும் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

சமனல வாவியிலிருந்து நீர் வழங்கி பல நாட்கள் கடந்துள்ளன. இருப்பினும் இன்று வரை ஒரு துளி நீர் வராத கால்வாய்களும் காணப்படுகின்றன. எங்களுடைய வீட்டுக்கு முன்பாக செல்லும் கால்வாயிலும் கூட நீரில்லை.

இதில் 20 நாட்களாக நீரில்லை. எமக்கு நீரை ஒழுங்குபடுத்த வேண்டிய தேவை இருந்தது. நாம் சரியான முறையில், சரியான நேரத்தில் நீர் ஒழுங்குபடுத்தல் தீர்மானங்களை முன்னெடுத்தோம். நான் கூறிய நேரத்தில் நீரை வழங்கியிருந்தால் மேலும் பல ஏக்கர் வயல் நிலங்களை பாதுகாத்திருக்க முடியும். ஆனால் துரதிஷ்டவசமாக அதிகாரிகளின் இழுபறிகளால் அப்பாவி விவசாயிகளும் அவல நிலைக்கு முகங்கொடுத்து நாட்டில் உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதை எவ்வாறு மதிப்பீடு செய்வது? எவ்வாறு நட்டஈடு வழங்குவது? என்பது அடுத்த பிரச்சினையாக உள்ளது. ஏனென்றால் பொருளாதாரத்தில் வங்குரோத்து அடைந்த நாடொன்றின் சகல பிரச்சினைகளுக்கும் மத்தியில் இதனை வழங்க வேண்டி ஏற்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (நி-5)


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



கடந்த 14.07.2023 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர். சின்னத்துரை யோகராசா (வவி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 13.08.2023 ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை 16.08. 2023 (புதன்கிழமை) முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

VCC, மாவிட்டபுரம் தெற்கு,
தெல்லிப்பளை.

இங்ஙனம்,
குடும்பத்தினர்.

(சி-7064)



# 61 ஆவது 40 ஆவது நினைவஞ்சலி



(1891–1962)
அமரர்.
க. வே. செல்வஜோதி
(Retd. Station master Malaysia)



16.03.1938–28.07.1983
அமரர்.
தங்கராசா ஜெயமணி

"தர்மசிந்தையுடன் கந்தவன சிவன் ஆலய அருகில் சொந்த ஆதனத்தில் "ஜோதி ஆச்சிரமம்" அமைத்து (1956), மாண்புடன் மனைவியை இறுதியில் அங்கு வாழ வழிவகுத்து (1969-2000), தன் இறப்பை முற்கூட்டியே உணர்ந்து "தர்ம நன்கொடை" அளித்த "தீர்க்கதரிசி செல்வஜோதி" இறைவனடி சேர்ந்தமை.

கந்தனை தரிசித்து ஜோதி ஆச்சிரமத்தில் என் "உச்சிமோந்து" கன்னத்தில் முத்தமிட்டு" உடன்பிறப்புக்களின் "ஒற்றுமை"யை இறுதியாக வலியுறுத்தி தன் இறப்பை முற்கூட்டியே வரவழைத்த "மானத்தி" யாம் "உத்தமி" யான எம் "அன்னை" இறைவனடி சேர்ந்த நன்னாளாம் ஆடிஅமாவாசையும் தந்தையின் புண்ணிய தினமுமான இன்றும் உன் இறுதி ஆசையான "ஒற்றுமை"யுடனும "பெருமை" யுடனும் நாம் இங்கே!

"முருக வாசா",
சேர்மன் பொன்னையா வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

(16713)

த.செல்வசோதி,
நம்பிக்கைப் பொறுப்பாளர்,(Trustide)
"ஜோதி ஆச்சிரமம்.


# இராசிபலன்

15.08.2023
ஆடி 30, செவ்வாய்க்கிழமை
சதுர்த்தசி பிற்பகல் 01.38 மணிவரை
பூசம் பிற்பகல் 03.42மணிவரை

சுபநேரம்-10.35-12.05 மணிவரை
இராகுகாலம்-3.05-04.35 மணிவரை
ஆடி அமாவாசை விரதம்.

சந்திராஷ்டமம்-
மூலம், பூராடம்.

வளவன்

**மேஷம்** – பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், மற்றவர்கள் வாங்கிய பொருளை நீங்களும் வாங்க முற்படுவீர்கள், சுபசெய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்** – குல தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்** – ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**மகரம்** – உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், பேச்சில் கனிவு பிறக்கும், காரிய அனுகூலமுண்டு.

**ரிஷபம்** – குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், அரசு வழியில் அனுகூலம் உண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்** – திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படைவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், விரயங்கள் கூடும் நாள்.

**விருச்சிகம்** – எதிர்பார்த்த காரியம் ஒன்று நடைபெறும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், ரோக பயமுண்டு.

**கும்பம்** – உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள்.

**மிதுனம்** – இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், புதிய நட்பால் பொருளாதார நிலை உயரும் வாய்ப்புண்டு.

**கன்னி** – குடும்பத்தில் உறவினர்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு

**தனுசு** – திட்டமிட்ட காரியங்களில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், பொதுவாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

**மீனம்** – வியாபார விருத்தி உண்டு, யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி பெறுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்,

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு ஒற்றுமை நீங்கில் தாழ்வு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்த காம்யோற்சவம் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படம்- சிவசாந்தன்)

# கடத்த முற்பட்ட பசு பொலிஸாரால் மீட்பு



(கரணவாய்)

பருத்தித்துறை பகுதியில் இருந்து சட்டவிரோதமான முறையில் பசு ஒன்றினை கடத்த முற்பட்ட வேளை நெல்லியடி பொலிஸார் பசுவினை மீட்டதுடன் சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. மேலும் மூன்றரை லட்சம் பெறுமதியான பசுவே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

மேலும் கால்நடை களவு போயிருந்தால் பொலிஸாருடன் தொடர்பு கொள்ளுமாறு நெல்லியடி பொலிஸார் அறிவித்துள்ளனர். (நி-5-6-60)

# தமிழரின் தலை பற்றிப் பேசும் மேர்வினுக்கு தலையில் சுகமில்லை என்பது நாடறிந்ததே

## மனோ எம்.பி காட்டம்

(கொழும்பு)

தமிழரின் தலையை கொய்து வருவேன் என கொக்கரிக்கும் மேர்வின் சில்வாவுக்கு தலையில் சுகமில்லை என்பது நாடறிந்த சங்கதி. கூடவே ராஜபக்ஷ குடும்பத்தை திருடர்கள், தரகு பணம் பெற்றவர்கள் என்கிறார். அந்த குடும்பத்துடனேயே மேர்வின் சில்வா குடும்பம் நடத்தினார் என்பதும் நாடறிந்த சங்கதி. ஒருவேளை அத்தகைய திருட்டு, தரகுப் பணம் பெறும் பிரச்சினையால், ராஜ பக்ஷர்களுடன் நடத்திய குடும் பம் பிரிந்ததோ என்ற கேள் விபும் இப்போது எழுகிறது என தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பிலே இவ்வாறு தெரிவித்தார்.

இது பற்றி மனோ கணேசன் எம்.பி மேலும் கூறியதாவது.

முன்னையை ராஜபக்ஷ ஆட்சி காலத்தில், ஊடகவியலாளர்களின் கால்களை உடைப்பேன் என்றும் இவர் சொன்னார். அப்புறம் அரச ரூபவாஹிணி கூட்டுத்தாபனத்துக்கு சென்று தன் தலையையே உடைத்துக்கொண்டு வந்தார். பின்னர் தேர்தலில் போட்டியிட்டு சிங்கள மக்களாலேயே அரசியலில் இருந்து விரட்டப்பட்டார்.

நாட்டில் விகாரைகளையோ, கோவில்களையோ, பள்ளிகளையோ, தேவாலயங்களையோ கட்டுவிப்பதில், பூஜைகளை செய்வதில் இடைஞ்சல்கள் ஏற்பட்டால், அதை சட்டப்படி அணுக வேண்டும். அந்த சட்டமும் அனைவருக்கும் பொதுவாக இருக்க வேண்டும்.

தமிழர் தலைகளை கொய்து வருவேன் என்ற இப்படி தலை வெட்டும் காலம் எல்லாம் இப்போது மலையேறி விட்டது. இவரை பாரதூரமானவராக எடுக்கத் தேவையில்லை. ஆனால், இவரது கருத்து, பாரதூரமானது. நாட்டில் இன, மத குரோதத்தை உருவாக்கும் கருத்து. இவருக்கு எதிராக, சட்டம் பாய வேண்டும். அரசில் இருக்கும் தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் இது பற்றி தங்கள் தலைவர்களான ராஜ பக்ஷ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் புகார் செய்ய வேண்டும். (நி-5)



செஞ்சோலை படுகொலையின் 17 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் உயிரிழந்த மாணவிகளுக்குமுன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் சுடர் ஏற்றி மலர் தூவி வல்வெட்டித்துறையில் நேற்று அஞ்சலி செலுத்தினார். (படம்-சிவசாந்தன்)

# கோடா கசிப்புடன் சந்தேக நபர் கைது

(கரணவாய்)

வடமராட்சி சக்கு சம்பா பகுதியில் 100 லீற்றர் கோடாவுடனும் ஒன்றரை லீற்றர் கசிப்புடனும் சந்தேக நபர் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றுள்ளதுடன் குறித்த சந்தேக நபரினை விசாரணையின் பின் பருத்தித்துறை நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்த உள்ளதாக பொலிஸார் தெரிவித்து ள்ளனர். (நி-5-6-60)

# ஆடிச்செவ்வாய் பொங்கல் நிகழ்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி மிருசுவில் வடக்கு மிருசுவில் பத்திரகாளி கோவிலின் வருடாந்த பொங்கல் நிகழ்வு இன்று ஆடிச் செவ்வாய் தினத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது பத்திரகாளி மற்றும் பேச்சி அம்மனுக்கான பொங்கல் மற்றும் படையல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (நி-5-6-30)

# கலைஞானச்சுடர் இளங்கலைஞர் விருதுகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவினை முன்னிட்டு கலைஞர்களினை கௌரவிக்கும் பொருட்டு கலைஞானச் சுடர் விருது மற்றும் இளங் கலைஞர் விருது வழங்கப்பட்டவுள்ளன.

இதற்கு தகுதி வாய்ந்த கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

விருதுக்கான விண்ணப்பங்களினை நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் எனவும் நல்லூர் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (4-5)

# யாழ். மாவட்ட செயலகத்தில் மாபெரும் தொழிற் சந்தை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்டத் தொழில் நிலையமானது தம்மிடம் பதிவு செய்த ஆயிரத்திற்கு மேற்பட்ட பட்டதாரிகள் மற்றும் ஏனைய தராதரங்களையுடைய தொழில் தேடுவோருக்கு தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமையன்று யாழ்ப்பாண மாவட்டச் செயலக வளாகத்தில் தொழிற்சந்தை நிகழ்வினை நடத்தவுள்ளது.

இத்தொழிற்சந்தை நிகழ்வில் 50 இற்கு மேற்பட்ட தொழில் வழங்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டு தமக்கான ஆளணியினரை தெரிவு செய்யவுள்ளனர். வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்கள், கணனித்துறை, ஹோட்டல் முகாமைத்துவம், கணக்கியல், ஆடைத்தொழில், ஊடகத்துறை, காப்புறுதித் துறை, நிர்மாணத்துறை, சிறு தொழில் மற்றும் சுயதொழில் ஊக்குவிப்பு நிறுவனங்கள், அரச தொழிற்பயிற்சி நிறுவனங்கள், தனியார் மருத்துவத் துறை போன்ற பல்வேறுபட்ட நிறுவனங்கள் கலந்து கொள்ளவுள்ள இத்தொழிற் சந்தையில் தொழில் வாய்ப்பற்றிருக்கும் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டு தமக்கான தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள முடியும். மேலதிக தகவல்களை மாவட்டத் தொழில் நிலையத்தில் நேரடியாகவோ அல்லது 021 221 9359 என்ற அலுவலக தொலைபேசி இலக்கத்தினூடாகவோ தொடர்பு கொண்டு இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார். (நி-5-6)

# வேம்பிராய் பொது மயானத்தில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ள தீர்மானம்

(சாவகச்சேரி)

தென்மராட்சியின் மிகப் பெரிய மயானமாகவும் அதிக மக்களின் பாவனையில் இருக்கக்கூடியதுமான சாவகச்சேரிப் பிரதேச சபையின் வேம்பிராய் பொது மயானத்திற்கு பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் பல தசாப்தங்களுக்கு பிற்பாடு மயான அபிவிருத்திச் சபை உருவாக்கப்பட்டுள்ளது.

மயான அபிவிருத்திச் சபைத் தெரிவின் பின்னர் மயான அபிவிருத்திச் சபையால் எதிர்காலத்தில் மயானத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்றவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் மயானத்தை துப்புரவு செய்து நிலத்தை மட்டப்படுத்தல், உடல்களை புதைப்பதற்கு பிரத்தியேக இடங்களை ஒதுக்கி அதற்குரிய வசதிகளை ஏற்படுத்துதல், சுற்று மதில் அமைத்தல், மயானத்தில் கன்றுகள் மற்றும் நிழல் தரு மரங்களை நாட்டுதல், மயானத்திற்கு பெயர்ப்பலகை நாட்டுதல், அறிவுறுத்தல் பலகைகள் இடல், மின்னிணைப்பு பெறுதல், விளக்குகள் பொருத்துதல், நீர் குழாய்கள் மூலம் நீர் பெறும் வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற மயான அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி-5-6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த மக்களின் ஆணையை பெற வேண்டும்

## தேர்தலை நடத்துமாறு பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸதேரர் கோரிக்கை

(கொழும்பு)

**13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் என பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் பொதுமக்களின் ஆணையை பெற வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி தேர்தலை அறிவித்துவிட்டு 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரத்தை மக்களிடம் கோருங்கள்.

மக்கள் அதற்கான அதிகாரத்தை வழங்க தயார் என்றால் மாத்திரமே அதனை நடைமுறைப்படுத்துவதற்கான உரிமை கிடைக்கும்.

ஜனாதிபதிக்கு தற்போது அதற்கான ஆணையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய அரசாங்கத்திற்கு இதற்கான ஆணையில்லை, அவர்கள் தேர்தல் மூலம் இந்த பதவிகளை பெறவில்லை. முன்னாள் ஜனாதிபதிக்கு ஆதரவான சிலர் மூலமே அவர்கள் இந்த ஆதரவை பெற்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

## அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டும் நீரை பயன்படுத்துமாறு கோரிக்கை

### நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மீண்டும் அறிவுறுத்து

(கொழும்பு)

மிகவும் வறட்சியான காலநிலை நிலவுவதால், அத்தியாவசிய மற்றும் சுகாதார தேவைகளுக்கு மாத்திரமே தண்ணீரை பயன்படுத்துமாறு நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை மீண்டும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், நீர்மட்டம் வேகமாக சரிந்து வருவதால் மக்களின் நீர் நுகர்வு மிக அதிகமாக இருப்பதாகவும் வாரியம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், தற்போதைய சூழ்நிலையில் நுகர்வோரின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் மலையகத்தில் உள்ள நீர் பாவனையாளர்களுக்கு நீர் விநியோகம் செய்வதில் குறைந்த காற்றமுத்த தாழ்வு நிலை ஏற்படக்கூடும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறாயினும், வறட்சியான காலநிலையினால் மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களுக்கு வருந்துவதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளதுடன் இந்த நேரத்தில் நீரினை சிக்கனமாக பயன்படுத்துமாறும் கோரியுள்ளது.

இதேவேளை, வாகனங்களை கழுவுதல், தோட்டம் அமைத்தல் போன்ற தேவையற்ற நடவடிக்கைகளுக்கு நீர் பாவனையை குறைத்து, அன்றாட நடவடிக்கைகளுக்கு மாத்திரம் நீரை பயன்படுத்துமாறும் மக்களை வலியுறுத்தியுள்ளது. (நி-5)

## மரக்கறிகளின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் நேற்று திடீரென மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்று தந்தையை இழந்த இந்துக்கள் தந்தையர்களின் நினைவாக விரதமிருந்து பிதிர் கடன் செய்யவுள்ள நிலையிலேயே மரக்கறிகள் விலை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் ஒரு கிலோ காத்தோட்டியம் காய் 3200 ரூபாய்க்கும் பாகற்காய் 800 ரூபாய்க்கும் பயற்றங்காய் 400 ரூபாய்க்கும் மிளகாய் 550 ரூபாய்க்கும் கத்தரிக்காய் 350 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## டிஜிட்டல் அடையாள அட்டைகளை அறிமுகப்படுத்த அரசு தீர்மானம்

(கொழும்பு)

உத்தேச டிஜிட்டல் அடையாள அட்டையின் ஊடாக எதிர்காலத்தில் ஒவ்வொரு குடிமகனுக்கும் குறிப்பிட்ட இலக்கம் அறிமுகப்படுத்தப்படும் என ஜனாதிபதி செயலணியின் தலைவர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே சாகல ரத்நாயக்க இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

ஒவ்வொரு குடிமகனையும் உரிய இலக்கத்தின் மூலம் அடையாளம் காணும் முறைமையொன்றை தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவில் சாலையோரம் சென்று ஒரு கப் டீயை கடையில் வாங்கினாலும், இந்தியர்கள் ஆதார் எனப்படும் க்யூஆர் குறியீடு மூலம் 5 அல்லது 10 ரூபாய் கொடுக்கிறார்கள். அந்த முறை சிறிது காலம் கழித்து இலங்கைக்கு வரும். அந்த அடிப்படை அடித்தளத்தை நிறுவுவதற்கு சுமார் ஒரு வருடம் ஆகும். அனைவருக்கும் அடையாள எண் கிடைக்கும். அது தேசிய அடையாள அட்டை எண் அல்ல.

அந்த எண்ணின் மூலம் தான் எல்லாமே நடக்கும். மருத்துவமனைக்குச் சென்றாலும் அரசு அலுவலகத்துக்குச் சென்றாலும் அனைத்தும் அந்த எண் மூலம்தான் நடக்கும். அந்த நடவடிக்கை எடுக்க சுமார் இரண்டு ஆண்டுகள் ஆகும். அத்தகைய மொழிபெயர்ப்பு நம் முன்கொடுக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (நி-5)

# தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளராக சாணக்கியனை நியமித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை

## உதயகம்மன்பில



(கொழும்பு)

குருந்தூர்மலை விகாரை சம்பந்தமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைத்த விடயங்கள் பொய்யானவை என்பதை ஒப்புவிப்பதற்காக எதிர்வரும் 21 ஆம் திகதி குருந்தூர்மலைக்கு செல்லவுள்ளதாக பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில அறிவித்துள்ளார்.

குருந்தூர்மலை தொடர்பில் உதய கம்மன்பில ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குருந்தூர்மலை விகாரை உட்பட வடக்கு, கிழக்கில் உள்ள தொல்லியல் இடங்களைப் பாதுகாக்க வேண்டியிருப்பது பிரிவினைவாதிகளிடமோ, அடிப்படைவாதிகளிடமோ இருந்து அல்ல. தற்போதைய அரசாங்கத்திடம் இருந்தே அவற்றைப் பாதுகாக்க வேண்டும்.

வரலாறு பற்றிய துளியும் அறிவில்லாத, தம்மை அறிவாளிகள் என்று காட்டிக் கொள்ளும் நபர்களிடம் இருந்து எமது உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். வடக்கு, கிழக்கில் தொல்லியல் இடங்கள் அழிக்கப்பட்டுள்ளமை குறித்து விசாரணை நடத்த பாராளுமன்ற தெரிவுக் குழுவை நியமிக்குமாறு கோரி நாங்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி சபாநாயகரிடம் யோசனை ஒன்றை கையளிக்கவுள்ளோம்.

கிழக்கில் தொல்லியல் முக்கியத்துவ மிக்க 27 இடங்கள் இருப்பதாக அறிவித்திருந்தார். தற்போது தொல்லியல் பெறுமதி மிக்க இடங்கள் அதனை விட அதிகரித்துள்ளன.

இவை அழிவுக்கு உட்படுத்துவதற்காக அரச அதிகாரிகள் நீதிமன்றங்களில் பொய்யான அறிக்கைகளை வழங்கி வருகின்றனர்.

தொல்லியல் திணைக்களம் மற்றும் வனப் பாதுகாப்பு அதிகாரிகள் கடமைகளைச் செய்ய முயற்சிக்கும் போது பிரிவினைவாதிகளான தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு தடையேற்படுத்துவதாக எங்களுக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

அமைதியாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தால் ஜனாதிபதி, தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளராகச் சாணக்கியன் எம்.பியையும் கலாசார அமைச்சராக எம்.ஏ.சுமந்திரனையும் நியமிக்கவும் வாய்ப்புள்ளது.



ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவி வகித்த காலங்களிலேயே வடக்கு, கிழக்கில் உள்ள தொல்லியல் இடங்கள் அழிக்கப்பட்டன.


இதனால், அவர் தலைமை தாங்கும் அரசாங்கத்திடம் தொல்லியல் இடங்களைப் பாதுகாக்க ஒப்படைப்பது, நரியிடம் கோழியை வழங்கியமைக்கு ஈடானது எனவும் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 179

# துன்பம் வருவதற்கும் ஒரு காரணம் உண்டு



ஒரு ஊரில் உப்பு வியாபாரி ஒருவன் இருந்தான். அவனுக்கு முன்னைப் போல வியாபாரம் ஆகாததால் வறுமையில் வாடினான்.

அவன் இறைவனை நோக்கி "ஆண்டவா எனக்கு மட்டும் ஏன் இவ்வளவு கஷ்டத்தை குடுக்கிற" என்று கேட்டுவிட்டு தன் கழுதையின் மேல் உப்பு மூட்டைகளை ஏற்றிக் கொண்டு பக்கத்து ஊர் சந்தைக்கு சென்றான். ஆனால் வழியில் பெரிய மழை பெய்து உப்பு முழுவதும் கரைந்து போனது. "உன்னை அவ்வளவு வேண்டியும் ஏழையான என் வயிற்றில் இப்படி அடித்து விட்டாயே" என இறைவனைத் திட்டினான்.

பின் மழை சற்றே நிற்க ஊர் திரும்பினான். வழியில் சில திருடர்கள், வியாபாரிகள் தன் பொருளை சந்தையில் விற்றுவிட்டு பணத்துடன் வருவார்கள் என எண்ணி வெடி மருந்து கொண்டு வெடிக்கும் துப்பாக்கியுடன் நின்றார்கள்.

வியாபாரி திரும்பி வரும் போது வெடிமருந்து மழையால் நனைந்திருந்ததால் துப்பாக்கி வெடிக்கவில்லை. உடனே திருடர்கள் மாட்டிக் கொள்வோமோ என்று பயந்து ஓட்டம் பிடித்தனர்.

அப்போதுதான் உப்பு வியாபாரி நினைத்தான். "மழை வந்ததால் உப்பு தான் போச்சு. மழை வராதிருந்தால் என் உயிர் அல்லவா போயிருக்கும். ஆண்டவன் கருணையே கருணை. அது புரியாமல் ஆண்டவனை திட்டினேனே" என உருகினான்.

நமக்கு எந்த ஒரு துன்பம் வந்தாலும் அதற்கு கண்டிப்பாக ஒரு காரணம் இருக்கும் என்பதை அறிய வேண்டும். அதுபோல் துன்பம் விலகவும் ஒரு வழி இருக்கும் என்றும் உணர வேண்டும்.

# இந்தியாவின் 77 ஆவது சுதந்தி

# டில்லி செங்கோட்டையில் உச்ச

(டில்லி)

**இந்தியாவின் 77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இன்று டில்லி செங்கோட்டையில் பிரதமர் நரேந்திர மோடி 9 ஆவது முறையாக தேசிய கொடி ஏற்றவுள்ளார்.**

விழாவில் முப்படை அணி வகுப்பை பிரதமர் நரேந்திர மோடி பார்வையிடுவார். தொடர்ந்து தேசியக்கொடி ஏற்றப்பட்டு, தேசிய கீதம் இசைக்கப்படும். பின்னர் கலை, கலாசார நிகழ்ச்சி கள் நடைபெறும். தொடர்ந்து மூவர்ண பலூன்கள் வானில் பறக்க விடப்படும். விழாவில் நாடு முழுவதும் இருந்து சுமார் 1,800 சிறப்பு விருந் தினர்கள் கலந்து கொள்ள வுள்ளார்கள்.

இதற்காக டில்லி செங் கோட்டையை சுற்றி பாது காப்பு அதிகரிக்கப்பட்டு உள் ளது. செங்கோட்டையில் இருந்து 300 மீற்றருக்குள் துணை இராணுவப்படை நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் தேசிய பாதுகாப்புப்படை, சிறப்புப் பாதுகாப்புக்குழு, மத்திய ஆயுதக் காவல் படைகள் மற்றும் டில்லி பொலிஸாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு உள்ளனர்.

சுதந்திர தினத்தன்று டில்லி விமான நிலையத்தில் திட்டமிடப் படாத விமானங்கள் புறப்படுவ தற்கும் தரை இறங்குவதற்கும்

# சிம்லாவில்

# சுமார் 50



(டில்லி)


தொடர்கனமழை காரண மாக சிம்லாவில் ஏற்பட்டுள்ள நிலச்சரிவில் சிக்கி 50 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தி ருக்கலாம் என அஞ்சப்படு கிறது.

இமாச்சலப் பிரதேசத்தில் கடந்த சில நாட்களாக கன மழை பெய்து வருகிறது. கடந்த 24 மணி நேரத்தில் பெய்த கனமழையால் நிலச் சரிவுகள் ஏற்பட்டதில் ஏராள மான மரங்கள் வேரோடு சாய்ந்துள்ளன. நூற்றுக்க ணக்கான வீடுகள் மற்றும் வாகனங்கள் சேதம் அடைந் துள்ளன.

சிம்லா நகரின் புறநகர் பகுதி யான நேதலி என்ற இடத்தில் ஏற்பட்டுள்ள நிலச்சரிவில் ஏராள மான வீடுகள் புதைந்துள்ளன. அவற்றில் இருந்தவர்கள் 50 இற்கும் மேற்பட்டோர் காணவில்லை என்பதால் அவர்கள் அதற்குள் சிக்கி உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

சிம்லா மற்றும் சண்டிகரை

# விண்வெளி சோதனையில் புதிய மைல்கல்லை எட்டிய இஸ்ரோ



(டில்லி)

ககன்யான் திட்டத்தில் விண்வெளிக்குச் சென்று திரும்பும் வீரர்களை பூமி யில் பத்திரமாகத் தரையி றக்குவதற்கான பரசூட் சோதனை வெற்றியடைந் துள்ளது.

இதையடுத்து, சோதனை ராக்கெட்டிலும் இந்த பரசூட் பொருத்தப்படும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

மோர்டார்ஸ் எனப்படும் பைரோ அடிப்படையிலான சாதனங்களுக்குள் டிரோக் பரசூட்டுகள் இருக்கும். இதைத் திறப்பதற்கான கட்டளை பிறப்பிக்கப்பட்டதும் 5.8 மீற்றர் விட்டம் கொண்ட பரசூட் காற்றில் பறந்து தரை யிறங்கும் விண்கலத்தின் வேகத்தைத் தணிக்கும் என இஸ்ரோ கூறுகிறது.

2024 இறுதிக்குள் ககன் யான் திட்டம் செயற்படுத்தப் படும் என எதிர்பார்க்கப்படு கிறது.

இதற்காக 2019 ஆம் ஆண்டு இந்திய வான்ப டையைச் சேர்ந்த விண் வெளி வீரர்கள் தேர்வு செய் யப்பட்டு அவர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. (நி-5)

# ஒரு வீட்டில் ஏற்ப

# 10 வீடுகள் சேதம்,

(வோஷிங்டன்)

வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தால் ஐவர் உயிரிழந் துள்ளதுடன் 10 வீடுகள் மற் றும் வாகனங்கள் சேதமடைந் துள்ள சம்பவம் அமெரிக்கா வின் பென்சில் வேனியாவில் இடம்பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியள வில் இச்சம்பவம் இடம்பெற் றுள்ளதாகவும் இதன்போது தீ விபத்து ஏற்பட்ட வீட்டுக்கு அரு கில் உள்ள வீடுகளுக்கும் தீ வேகமாகப் பரவி உள்ளதாக வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அத்துடன் விபத்தை தொடர்ந்து ஏற்பட்ட அதிர்வுகளால், சுற்றியுள்ள 9 இற்கும் மேற்பட்ட வீடுகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ந்திரதின விழா இன்று
## ச்சக்கட்ட பாதுகாப்பு



சில மணிநேரம் தடை விதிக்கப்படும். எனினும் வழக்கமாக செல்லும் விமானங்கள் புறப்பட எந்த பாதிப்பும் இருக்காது. இந்திய விமானப்படை, எல்லைப் பாதுகாப்புப்படை மற்றும் இராணுவ விமானப் படையின் ஹெலிகொப்டர்களுக்கு இந்த அறிவிப்பு பொருந்தாது.

இது தவிர, ஆளுநர்கள் மற்றும் முதலமைச்சர்கள் பயணம் செய்யும் மாநில ஹெலிகொப்டர்கள் அனுமதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டு உள்ளது. டெல்லியில் நாளை வரை டிரோன்கள் மற்றும் பாராகிளைடிங் தடை செய்யப்பட்டுள்ளன. (நி-5)

## ஈரான் பயங்கரவாத தாக்குதலில் நான்கு பேர் உயிரிழப்பு

(தெஹ்ரான்)

ஈரானில் முஸ்லிம்களின் வழிபாட்டுத்தலம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலில் நான்கு பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த தாக்குதல் நடவடிக்கையானது நேற்று முன்தினம் ஈரானின் ஷிராஸில் நகரில் நடத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் தாக்குதலை மேற்கொண்ட நபர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும், குறித்த தாக்குதலுக்கு எந்தவொரு குழுவும் இதுவரையில் பொறுப்பேற்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் கடந்த ஒக்டோபரில் இஸ்லாமிய அரசு 15 பேரைக் கொன்ற சம்பவத்திற்கான பதில் தாக்குதலாக இந்த தாக்குதல் இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

ஈரானின் பாராளுமன்றம் மற்றும் இஸ்லாமிய குடியரசின் நிறுவனர் அயதுல்லா ருஹோல்லா கொமேனியின் கல்லறையை குறிவைத்து 2017 இல் நடந்த இரட்டை குண்டுவெடிப்பு உட்பட ஈரானில் முந்தைய தாக்குதல்களுக்கு இஸ்லாமிய அரசு உரிமை கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## நேருக்கு நேர் மோதவுள்ள எலான் மஸ்க்-மார்க் ஜுக்கர்பெர்க்



(வோஷிங்டன்)

சமூக ஊடக வல்லுநர்களான டுவிட்டர் நிறுவனத்தின் தலைவர், எலோன் மஸ்க் மற்றும் ஃபேஸ்புக் நிறுவன தலைவர் மார்க் ஜுக்கர்பெர்க் ஆகியோருக்கு இடையேயான சண்டை ஓகஸ்ட் 26 ஆம் திகதி நடைபெற இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

மெட்டா நிறுவன தலைவரான ஜுக்கர்பெர்க் தனது புதிய சமூக ஊடக செயலியான த்ரெட்ஸில், தனது தொழில் ரீதியிலான போட்டியாளரான மஸ்க் சண்டைக்காக மிகவும் ஆர்வமாக காத்திருப்பதாக தெரிவித்துள்ளார். இந்த பதிவுக்கு பின் மஸ்க் எக்ஸ் செயலியில் சண்டையிடுவதற்காக வெஸ்ட் லிப்டிங் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறேன் என குறிப்பிட்டுள்ளார்.

இந்த இருவரின் சண்டையின் மூலம் பெறப்படும் பணம் அனைத்தும் தொண்டுக்காக செலவழிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த சில வாரங்களாகவும் சமூக வலைதள பெரும் புள்ளிகளான ஜுக்கர்பெர்க் - மஸ்க் ஆகியோர் தொடர்ந்து உரையாடலில் ஈடுபட்டு வருகின்றனர். இருவருக்கும் இடையிலான சண்டையின்போது இடுப்பு, முதுகு தண்டுவடம், கண்கள், கழுத்து பகுதிகளில் தாக்குவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இரண்டு நிமிட சுற்றுக்கு பிறகு நடுவர்கள் ஒருமனதாக எடுக்கும் முடிவின்படி வெற்றியாளர் அறிவிக்கப்படுவார். நாக்அவுட் மூலமாகவும் இந்த போட்டி நிறைவு பெறலாம்.

அதாவது எதிராளியை பஞ்ச் அல்லது கிக் மூலம் நாக்அவுட் செய்யலாம் போன்ற விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இவர்கள் இருவருக்கும் இடையிலான மோதல், எக்ஸ் செயலியில் (டுவிட்டர் செயலியின் தற்போதைய பெயர்) சண்டை லைவ் ஸ்ட்ரீம் செய்யப்படும் என கூறினார். (நி-5)

## ல் திடீர் நிலச்சரிவு
## ௦ பேர் உயிரிழப்பு

இணைக்கும் சிம்லா-கல்கா தேசிய நெடுஞ்சாலையில் கோட்டி அருகே சக்கி மோர் என்ற இடத்தில் சாலைப் பகுதியில் தொடர்ந்து நிலச்சரிவு ஏற்பட்டது.

செயின்ட் எட்வர்ட்ஸ் பள்ளிக்கு அருகிலும் நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவின் காரணமாக பால், செய்தித்தாள்கள் மற்றும் உணவுப் பொருட்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம் கடந்த சில நாட்களாக பாதிக்கப்பட்டுள்ளன.

மண்டியில் அதிகபட்சமாக 236, சிம்லாவில் 59 மற்றும் பிலாஸ்பூர் மாவட்டத்தில் 40 என மொத்தம் 452 சாலைகள் இப்போது வாகனப் போக்குவரத்திற்காக மூடப்பட்டுள்ளன என்று மாநில அவசரகால செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. (நி-5)

## உக்ரைனை நோக்கிச் சென்ற சரக்குக் கப்பலுக்கு எச்சரிக்கை சூடு நடத்திய ரஷ்யா

(மொஸ்கோ)

கருங்கடலில், உக்ரைனிலுள்ள இஸ்மெல் துறைமுகத்துக்குச் சென்று கொண்டிருந்த சரக்குக் கப்பலை நோக்கித், தனது போர்க்கப்பல்கள் எச்சரிக்கை வேட்டுக் கிளப்பியதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

மேற்கு பசுபிக் பெருங்கடலிலுள்ள பலாவ் நாட்டில் பதிவு செய்யப்பட்ட கப்பலைச் சோதனைக்காக நிறுத்தும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது.

ஆனால், மாலுமி அதைப் பொருட்படுத்தவில்லை என்று ரஷ்யா கூறியது.

ஐக்கிய நாட்டு நிறுவன ஏற்பாட்டின் கீழ் உக்ரைனுடன் செய்து கொண்ட தானிய உடன்பாட்டிலிருந்து சென்ற மாதம் ரஷ்யா வெளியேறியது.



அதன்பிறகு உக்ரைனுக்கு முதன்முறையாகச் சரக்குக் கப்பலை நோக்கி ரஷ்யா எச்சரிக்கைச் சூடு நடத் தியுள்ளது.

உக்ரைனுக்குச் செல்லும் எல்லாக் கப்பல்களிலும் ஆயுதங்கள் கொண்டு செல்லப்படும் சாத்தியம் இருப்பதாக மொஸ்கோ குறிப்பிட்டது.

உக்ரைனின் ஹெர்சன் வட்டாரத்திலும் ரஷ்யா தாக்குதல் நடத்தியது. (நி-5)

## பட்ட தீ விபத்தால்
## ம், ஐவர் உயிரிழப்பு



உள்ள கண்ணாடி ஜன்னல்களும் கதவுகளும் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்விபத்தில் சிறுவர்கள் உட்பட ஐவர் உயிரிழந்துள்ளனர் எனவும் பலர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில் இவ்விபத்துக்கான காரணம் குறித்து தீவிர விசாரணைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் சுமார் 3.9 மில்லியன் இலங்கையர்கள்

## யுனிசெப் அறிக்கையில் தகவல்

(கொழும்பு)

**சுமார் 3.9 மில்லியன் இலங்கையர்கள் உணவுப் பாதுகாப்பின்றி உள்ளதாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் வெளியிட்டுள்ள சமீபத்திய நிலைமை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சுமார் 2.9 மில்லியன் குழந்தைகளுக்கு உயிர்காக்கும் ஊட்டச்சத்து, சுகாதாரம், கல்வி, தண்ணீர் மற்றும் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு சேவைகளைப் பெற மனிதாபிமான உதவிதேவை என்று யுனிசெப் அறிக்கை கூறுகிறது.

மே மாத நிலவரப்படி சுமார் 3.9 மில்லியன் மக்கள் மிதமான உணவுப் பாதுகாப்பற்றவர்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று அது குறிப்பிடுகிறது. தோட்டத் துறை சமூகங்கள் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

நாட்டில் வெளிப்படையான பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் மேம்பட்ட உணவுப் பாதுகாப்பு இருந்தபோதிலும், 62 சதவீத குடும்பங்கள், கடந்த மே மாதத்தில் 48 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், சேமிப்பைத் திரும்பப் பெறுதல், பணம் கடன் வாங்குதல் மற்றும் கடனில் உணவை வாங்குதல் போன்ற வாழ்வாதார அடிப்படையிலான சமாளிப்பு உத்திகளைக் கடைப்பிடிக்கின்றன.

26 சதவீத குடும்பங்கள் அவசரகால அல்லது நெருக்கடி நிலை வாழ்வாதாரத்தை சமாளிக்கும் உத்திகளைப் பயன்படுத்துகின்றன. அதில் "உற்பத்திச் சொத்துக்களை விற்பது அத்தியாவசிய உடல்நலம்/கல்விச் செலவுகளைக் குறைத்தல், குழந்தைகளை பாடசாலையிலிருந்து முழுவதுமாக விலக்குதல் மற்றும் நிலத்தை விற்பது" ஆகியவை அடங்கும்.

அறிக்கையின்படி, ஏப்ரல் 2023 இல், ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் எடை 15.8 சதவீதமாக இருந்தது. இது கடந்த ஆண்டு ஏப்ரலில் 13.1 சதவீதமாக இருந்தது.

கல்வி, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பிற்கான செலவினங்களை விட உணவு நுகர்வுக்கு முன்னுரிமை அளிக்க பல குடும்பங்கள் எதிர்மறையான சமாளிக்கும் வழிமுறைகளை நாடுகின்றன என்று யுனிசெப் கூறுகிறது.

வரட்சி நிலைமைகள் எதிர்வரும் விவசாயப் பருவத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்றும் ஏற்கனவே அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 45,000 ஏக்கர் நெற்பயிர்கள் கடுமையான வரட்சியினால் அழிவடையும் அபாயத்தில் இருப்பதாகவும் அறிக்கை குறிப்பிடுகிறது.

"மோசமான வரட்சி நிலைமைகள் அறுவடையை பாதிக்கும் நிலையில், அரிசி மொத்த மற்றும் சில்லறை விலைகள் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது நாட்டில் தற்போதுள்ள உணவுப் பற்றாக்குறையை அதிகப்படுத்தும் என்றும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி-5)

## இலங்கைக்கு பயணம் செய்வதை மீளாய்வு செய்யுங்கள்

### அவுஸ்திரேலியர்களை எச்சரிக்கும் அந்நாட்டு அரசாங்கம்

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்யும் அவுஸ்திரேலியர்களுக்கான பயண ஆலோசனையை மீளாய்வு செய்ய அந்த நாட்டு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய, இலங்கைக்கு விஜயம் செய்யும் போது ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள் போன்றவற்றில் அவதானமாக இருக்குமாறு அவுஸ்திரேலிய பிரஜைகளுக்கு அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்கள் இடம்பெறும் பகுதிகளுக்கு செல்வதை தவிர்க்குமாறும் உணவுப் பொருட்களுக்கும் மருந்துக்கும் தட்டுப்பாடு ஏற்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்யும் அவுஸ்திரேலியர்களிடம், அதிக கட்டணம் வசூலிப்பது, கடன் அட்டை மோசடி, கொள்ளை மற்றும் பாலியல் துன்புறுத்தல் போன்ற குற்றச் செயல்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலைகள் குறித்து அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (நி-5)

## கதிர்காமம் நோக்கிச் சென்ற பேருந்து விபத்துக்குள்ளானதில் எழுவர் காயம்

(கொழும்பு)

கொழும்பில் இருந்து கதிர்காமம் நோக்கி பயணித்த பேருந்து ஒன்று பம்பலப்பிட்டி பகுதியில் வைத்து விபத்துக்குள்ளானதில் 7 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை பாரவூர்தி ஒன்றுடன் குறித்த பேருந்து மோதி வீதியில், குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில், காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய வைத்



தியசாலையில், அனுமதிக்கப்பட்டுள்ளனர். (நி-5)

## ஒரு இலட்சத்து 80 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் ஏல விற்பனை


(கொழும்பு)

ஒரு இலட்சத்து 80 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள், நாளை ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அதன்படி 91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 90 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 50 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 364 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 40 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது. (நி-5)

## ஆண்டு இறுதிக்குள் வட்டி வீதங்கள் குறைக்கப்படும்

### சாகல ரத்நாயக்க



(கொழும்பு)

இலங்கையில் இந்த ஆண்டின் இறுதிக்குள் வங்கி வட்டி வீதங்களை ஒற்றை இலக்கத்திற்கு கொண்டு வர முடியும் என ஜனாதிபதியின் பணிக்குழாம் மட்ட பிரதானி சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதனால் சிறு மற்றும் நடுத்தர உரிமையாளர்கள் மீண்டும் வலுப்பெறுவார்கள் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் சிறிகொத்த கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற அதிகார சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியின் போது, வங்கி வட்டி விகிதங்கள் 34 சதவீதமாக இருந்ததாகவும், ஆனால் இன்று அவை 16 முதல் 17 சதவீதமாக உள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளதாக சாகல ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். (நி-5)

## சர்வதேச நாணய நிதியத்துடன் இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடன் இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது.

இந்த முக்கியமான கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று இந்த காலப்பகுதியில் நாட்டிற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இந்த நடவடிக்கைகள் நிதி அமைச்சின் தலைமையில் நடைபெறும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் வகுத்துள்ள நிபந்தனைகளில் ஏறக்குறைய 80 விகிதமானவை ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சேவை ஒப்பந்தங்களை மீறி
# வெளிநாடு சென்ற வைத்தியர்களின் பெயர்கள் கறுப்பு பட்டியலில்

### சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

சுகாதார அமைச்சுக்கு அறிவிக்காமல் இரகசியமாக வெளிநாடுகளுக்குச் சென்ற வைத்தியர்களின் பெயர்கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், அவர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதியை இரத்து செய்யுமாறு வைத்திய சபை கோரிய போதிலும் இதுவரையில் அவ்வாறு செய்யப்படவில்லை எனவும் சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றன.

கடந்த ஒன்றரை வருடங்களில் விசேட பயிற்சிபெற்று வெளிநாடுகளில் இருந்து இலங்கை திரும்பிய சுமார் 120 வைத்தியர்கள் சேவை ஒப்பந்தங்களை மீறி சட்டவிரோதமான முறையில் மீண்டும் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-5)

## தனமல்விலவில் 4 கஞ்சா தோட்டங்கள் முற்றுகை
### மூவர் கைது

(கொழும்பு)

தனமல்வில ஹம்பேகமுவ பகுதியில் சட்டவிரோதமான முறையில் தனியாருக்குச் சொந்தமான 4 காணிகளில் கஞ்சா பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்த மூவரை விசேட அதிரடிப் படையினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

அத்துடன் குறித்த காணிகளில் காணப்பட்ட அனைத்து கஞ்சாச் செடிகளையும் பொலிஸார் அழித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் கைது செய்யப்பட்டவர்களையும் சான்றுப் பொருளாக கஞ்சாச் செடிகளையும் தம்மிடம் விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளதாகவும் இவர்களை நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஹம்பேகமுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-5)

## யால தேசிய பூங்காவிற்கு பவுஸர்கள் மூலம் தண்ணீர்

(கொழும்பு)

தற்போது நிலவும் கடும் வரட்சியான காலநிலை காரணமாக யால தேசிய பூங்காவும் பாதிக்கப்பட்டுள்ளதால் வன விலங்குகளின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்காக பவுஸர்கள் மூலம் தண்ணீர் எடுத்துச் செல்லப்பட்டு சிறிய குளங்களுக்கு பாய்ச்சப்பட்டு வருவதாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

யால தேசிய பூங்கா ஊடாக பாயும் மாணிக்க கங்கையில் இருந்து நீர் எடுக்கப்பட்டு பவுஸர்கள் மூலம் பூங்காவுக்கு கொண்டு செல்லப்பட்டு வன விலங்குகள் தண்ணீர் அருந்தும் இடங்களில் விடப்படுகிறது.

மேலும், பூங்காவிலுள்ள வறண்டு கிடக்கும் தொட்டிகளுக்கு சோலார் ஜெனரேட்டர் மூலம் தண்ணீர் பாய்ச்சப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (நி-5)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 400 | 400 |
| தக்காளி | 250 | 300 | 280 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 240 | 240 | 200 |
| கோவா | 250 | 250 | 280 | 300 |
| கரட் | 350 | 500 | 500 | 550 |
| பூசணி | 120 | 120 | 100 | 120 |
| புடோல் | 100 | 80 | 100 | 150 |
| வாழைக்காய் | 200 | 160 | 200 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 350 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 160 | 180 |
| பாகற்காய் | 450 | 400 | 400 | 300 |
| வெண்டக்காய் | 140 | 100 | 80 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 170 | -- | 200 |
| பயற்றங்காய் | 500 | 400 | 400 | 400 |
| லீக்ஸ் | 260 | 200 | 200 | 300 |
| பீற்றூட் | 120 | 160 | 150 | 200 |
| கறிமிளகாய் | 300 | 400 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 300 | 250 | 200 | 200 |
| போஞ்சி | 450 | 550 | 500 | 500 |
| கத்தரிதம்புள்ள | 160 | 150 | 200 | 160 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 80 | 150 |
| தேசிக்காய் | 450 | 400 | 400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 75 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 300 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 250 | 400 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 40 | 60 |
| ஈரப்பலா | 80 | 150 | 60 | 120 |

# பிதிர்களின் ஆசியை வேண்டி இன்று ஆடி அமாவாசை விரதம் அனுஷ்டிப்பு

அமாவாசை என்றால் நம் சமயத்தவர்களுக்கு மிகுந்த பயபக்தி உண்டாகிறது. வருடத்தில் வரும் அமாவாசையில் சிறந்தது ஆடி அமாவாசையாகும்.

அமாவாசை என்பது அமா+வாசி என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இருக்கின்றன. "அமா" என்பது ஓரிடத்தில் பொருந்தியது என்றும் "வாசி"என்றால் சேர்ந்திருப்பது என்றும் பொருள்படும். அதாவது சூரியனும் சந்திரனும் ஓர் இராசியில் சேர்ந்திருக்கும் நாளே அமாவாசை எனப்படும்.

பூமிக்கு நேராக வரும் போது அமாவாசை திதி உண்டாகும். திதி என்பது சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடைப்பட்ட தூரத்தை அதாவது பாகத்தைக் குறிப்பிடும் ஒரு சொல். சந்திரன் சூரியனிலிருந்து பிரிந்து சுற்றி வருகின்ற மார்க்கத்தில் பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் 180 ஆவது பாகையில் வரும் போது பௌர்ணமி திதி உண்டாகும்.

திதிகள் பூர்வபக்ச திதிகள், அபர பக்சத் திதிகள் என இரு வகைப்படும். அமாவாசைக்கடுத்து பிரதமை முதல் பௌர்ணமி இறுதியுள்ள திதிகள் பூர்வ பக்க திதிகள் எனப்படும். பௌர்ணமிக்கடுத்து பிரதமை முதல் அமாவாசை வரை அபர பக்கத் திதிகள் எனப்படும்.மேலும் பூர்வ பக்க,அபரபக்க என்பன முறையே வளர்பிறை, தேய்பிறை எனவும் சொல்லப்படுகிறது.





வானியலும் சோதிடமும் விஞ்ஞானமும் இணைந்த விளக்கமாகக் கொண்டது ஆடி அமாவாசையாகும்.

ஆன்மிக முறையில் கவனித்தால் சூரியன் ஞானிகளுக்கு ஆத்ம காவலன் ஆவான். பிராணிகளின் ஆத்ம அமைப்பு சூரியனாலேயே நிகழ்கிறது எனச் சொல்லப்படுகிறது.

சந்திரன் மனதிற்கு அதிபதி. மகிழ்ச்சி, தெளிந்த அறிவு, உற்சாகம், இன்பம் முதலியன சந்திரனால் அடையத்தக்கன. சூரியன், சந்திரன் இருவரும் ஒரே இராசியில் சஞ்சரிக்கும் புனித நாள் அமாவாசை ஆகும். இன்று சகல தேவர்களும் மதிக்கப்படுகிறார்கள். இந்த விரதம் இறைவனுக்கு மகிழ்ச்சி அளிப்பதாகவும் பெருமை தருவதாகவும் இருக்கும். இத்தினத்தில் தந்தையை இழந்தவர்கள் நோற்கப்பட வேண்டிய விரதமாகும். உயிர்களுக்கு சுகபோகமாகிய மாறுதல் உணர்த்தும் நாள் என்றும் இந்த நாள் குறிப்பிடப்படுகின்றது. சகல தேவர்களும் அமாவாசை தினத்தில் அதிதிகளாவார்.அன்று நோன்பு நோற்றலும் விரதம் இருத்தலும் சிறந்தது. இறைவனுக்கு மகிழ்ச்சி அளித்தலும் பெருமை தருவதுமான நன்னாளாகும். உயிர்கள் நற்பதவியடைய சிரார்த்தம் செய்வது இன்றியமையாததாகும். ஒவ்வொரு அமாவாசையும் தந்தை வழிப் பிதிர்களுக்கு விசேடமானதாகும்.

இந்த அமாவாசையில் ஆடி அமாவாசை சிறந்ததாகும். இந்த ஆடி அமாவாசையில் ஓர் அந்தணருக்கு தான தர்மங்கள் செய்து எள்ளும் தண்ணீரும் இறைத்து பிதிர்க்கடனை முடிக்க வேண்டும். இதனை நிறைவேற்றும் போது தந்தையின் ஆத்மாவை நினைத்து அவ் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கப்பட வேண்டும்.

இறக்கின்ற கால நேரங்களைப் பொறுத்து நற்பதவி அடைய செய்வதற்கு சிரார்த்தம் இன்றியமையாததாகும்.

இவ்வுலகை விட்டு பிரிந்து போகும் பிதிர்களுக்கு செய்ய வேண்டிய எமக்கு முக்கியமான கடமைகளில் ஒன்றாகும். எனவே இறையடி சேர்ந்த தந்தையின் ஆத் மாவுக்கு நன்றி செலுத்துகின்ற இந்தப் பிதிர்க் கடன் கட்டாயம் செய்தல் வேண்டும்.

இறந்தவர்களுடைய தூய உடம்பும் காரணமாக வினை எனப்பட்டவையெல்லாம் தகனக்கிரியை, அந்தியேட்டி இவற்றால் நீங்கிவிடும். தெரியாமல் செய்த வினைகள் யாவும் இறுதியாகச் செய்யும் கிரியைகளால் மாறும். தெரிந்து செய்தவை அனுபவித்தே ஆக வேண்டும். சூரிய மண்டலத்துக்கு அப் பால் உள்ள மண்டலம் பிதிர்களுக்குரிய மண்டலமாகும். இது பிதிர்லோகம் எனப்படும்.

**கலாபூஷணம் வி.செல்வரத்தினம் (J.P)**
**அராலியூர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 256





ஐம்பத்தேழாம் அத்தியாயம் மாய மோகினி

ஆரம்பத்திலிருந்து அவ்வளவாக அனுதாபம் இல்லாமலே கரிகாலன் கதையைக் கேட்டுக் கொண்டு வந்த பார்த்திபனுக்கும் இப்போது நெஞ்சு உருகி விட்டது. தன்னுடைய கண்களில் துளிர்த்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்.


"அரசே! ஒரு பெண்ணின் பேரில் ஏற்பட்ட காதலினால் இப்படிப்பட்ட துன்பம் உண்டாகக் கூடும் என்று நான் கனவிலும் கருதியதில்லை! இளவரசுப் பட்டாபிஷேகம் நடந்த அன்று இப்படி ஒர் அனுபவம் தங்களுக்கு நேர்ந்தது என்று எங்களுக்கெல்லாம் தெரியாது. ஆகையால், தாங்கள் மனச் சோர்வுடன் இருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டோம். என்னவெல்லாமோ பரிகாசப் பேச்சுகள் பேசித் தங்களைச் சந்தோஷப்படுத்தப் பார்த்தோம். அதெல்லாம் இப்போது எனக்கு நினைவு வருகிறது!" என்றான்.

"ஆம் நீங்கள் பரிகாசப் பேச்சுப் பேசினீர்கள். என்னை உற்சாகப்படுத்தப் பார்த்தீர்கள். என்னுடைய ஆட்சிக் காலத்தில் நான் செய்யப் போகும் மகத்தான காரியங்களைப் பற்றி பேசினீர்கள். இலங்கையிலிருந்து இமயம் வரையில் சோழ சாம்ராஜ்யத்தை அன்றைய தினமே விஸ்தரித்து விட்டீர்கள்! இன்னும், கடல் கடந்து சென்றும் இராஜ்யங்களைக் கைப்பற்றினீர்கள். அந்தப் பேச்செல்லாம் எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறது. அவ்வளவும் எனக்கு எவ்வளவு துன்பமளித்தது என்பதும் நினைவிருக்கிறது.


பிறகு ஒரு நாள் என்னை நந்தினி பழுவூர் அரண்மனைக்குக் கூப்பிட்டு அனுப்பினாள். போகலாமா, வேண்டாமா என்று என் மனத்தில் ஒரு போராட்டம் எழுந்தது. கடைசியில், போவதென்று முடிவு செய்தேன். பல விடயங்களில் எனக்குத் தோன்றியிருந்த ஐயங்களை அவளைக் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்பினேன். அவளுடைய பிறப்பின் உண்மையைத் தெரிந்து கொள்ள விரும்பினேன். அந்தப்புரத்தில் என் தந்தை அன்று மூர்ச்சை அடைந்து விழுந்ததற்கும் அங்கே நந்தினியை அவர் அகஸ்மாத்தாகக் கண்டதற்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்குமோ என்ற சந்தேகங்கூட என் மனத்தில் தோன்றியிருந்தது. அன்றைய தினம் சக்கரவர்த்திக்கு விரைவில் மூர்ச்சை தெளிந்துவிட்டதாயினும் மறுபடி அவர் பழைய ஆரோக்கியத்தை அடையவேயில்லை என்பது உனக்கு நினைவிருக்கும்.

நந்தினியுடன் பேசுவதிலிருந்து எனக்கு அதுவரை விளங்காத மர்மம் ஏதேனும் வெளியாகலாம் என்று எண்ணினேன். இதையெல்லாம் ஒரு வியாஜமாக வைத்துக் கொண்டேனே தவிர, உண்மையில் நான் சென்ற காரணம், அவளிடமிருந்த காந்த சக்திதான். வேறு காரணங்களைக் கற்பித்து என்னை நானே ஏமாற்றிக் கொண்டு சென்றேன். பழுவேட்டரையர் ஊரில் இல்லை. அவருடைய அரண்மனையில் என்னைத் தடுப்பாரும் இல்லை எனக்கும் நந்தினிக்கும் ஏற்பட்டிருந்த பழைய சிநேகிதத்தைப் பற்றி அங்கே அறிந்தவர்களும் இல்லை. இளவரசுப் பட்டம் கட்டிக் கொண்ட ராஜகுமாரன் பழுவூர் அரண்மனை ராணிமார்களிடம் ஆசி பெறுவதற்காக வருவதாகவே நினைத்தார்கள்.

(தொடரும்...)



நந்தினி பெரிய பழுவேட்டரையரை மணந்து கொண்டு இப்போது பழுவூர் இளைய ராணியாக விளங்குகிறாள் என்று குந்தவை சொன்னாள். என் நெஞ்சில் கூரிய ஈட்டி பாய்ந்தது. நண்பா! போர்க்களங்களில் எத்தனையோ முறை நான் காயம் பட்டதுண்டு. ஆனால், 'நந்தினி தான் பழுவூர் இளையராணி' என்று குந்தவை கூறியதனால் என் நெஞ்சில் ஏற்பட்ட காயம் இன்னும் ஆறவில்லை!' என்று ஆதித்த கரிகாலன் கூறித் தன்னுடைய நெஞ்சை அமுக்கிப் பிடித்துக் கொண்டான். நெஞ்சில் அவனுக்கு இன்னும் வலி இருந்து வந்தது என்பது நன்றாய்த் தெரிந்தது.



# சிறுவர் அரங்கம்

## அரசனும் புத்திசாலிக் குருடனும்



ஒரு ராஜா இருந்தார். அவருக்கு ஒரு மந்திரி. இவங்க ரெண்டு பேரும் ஒரு நாள் மாலை நேரம் நடைபயிற்சி போனாங்க. ஒரு ஆத்தங்கரை ஓரமா போயிட்டு இருந்தாங்க.

அப்போ அங்கே ஒரு கொடியில வெள்ளரிக்காய் காய்ச்சு தொங்குவதை பார்த்த ராஜா "மந்திரி அந்த வெள்ளரிக்காய பறிச்சுட்டு வா சாப்பிடலாம்"ன்னு சொன்னார்.

மந்திரி பறிக்க போனார். அங்கே உக்கார்ந்து இருந்த ஒரு குருடன் சொன்னான். ஐயா அது வெள்ளரிக்காய் இல்ல. அது குமட்டி காய். அது தின்ன வாந்தி தான் வரும்.

ராஜா சொன்னார். யோவ் மந்திரி.!! அத பறிச்சு சாப்பிடு. வாந்தி வருதான்னு பாக்கலாம்.

வேற வழி இல்லாம மந்திரி சாப்பிட்டார். உடனே மந்திரிக்கு குமட்டிக்கிட்டு ஒரே வாந்தி.

ராஜாகேட்டார்யோவ்.!! கபோதி..!! இதுக்கு என்ன தீர்வு.?ன்னு.

அந்த குருடன் சொன்னான். அது பக்கத்துல ஒரு கை மாதிரி பச்சை இலை இருக்கும். அத கையில கசக்கி மந்திரி வாயில விட்டா வாந்தி நிற்கும்ன்னு.

ராஜாவும் அப்படியே பண்ண... மந்திரிக்கு வாந்தி நின்னு போச்சு. மந்திரிக்கு போன உசுரு திரும்பி வந்தது.

ராஜா குருடனை பார்த்து கேட்டார். உனக்கு தான் கண் தெரியாதே.? எப்படி சரியா தீர்வு சொன்னாய்.? குருடன் சொன்னான். ராஜா..!! இந்த நாட்டில எங்கேயும் பஞ்சம் பசி பட்டினி. அப்படி இருக்கும் போது எவனாவது வெள்ளரி பிஞ்ச விட்டு வச்சிருப்பானா.? எப்பவும் இயற்கை ஒரு நோய் கொடுக்கற காய கொடுத்தா இறைவன் பக்கத்துலயே ஒரு மாற்று மருந்து வெச்சிடுவார்.

ராஜாவுக்கு சந்தோஷம். இந்தா ஒரு டோக்கன். என் அரண்மனையில கிழக்கு வாசலுக்கு போ. பட்டை சாதம் கொடுப்பாங்க. சாப்பிட்டு ஜாலியா இரு. சொல்லிவிட்டு ராஜா போய்ட்டார்.

கொஞ்ச நாள் கழித்து ஒரு வெளியூர் வியாபாரி ராஜா கிட்ட வந்தான். ராஜா என்கிட்ட வைரம் நிறைய இருக்கிறது. வாங்குறீங்களான்னு கேட்டான்.

இது ஒரிஜினலா போலியான்னு எப்படி தெரிஞ்சுக்கறதுன்னு ராஜாவுக்கு குழப்பம். மந்திரிய கூப்பிட்டார்.

ஏற்கனவே ஒரு தடவை வாந்தி எடுத்த அனுபவம் இருந்ததால.

வைரத்தை முழுங்கித்தொலைக்க சொன்னா என்ன பண்றதுன்னு பயந்துட்டு தெரியாதுன்னுட்டார்.

ராஜா சொன்னார். மந்திரி.!! போய் அந்த குருடனை கூட்டிட்டு வா. அவன்தான் காரண காரியத்தோட சரியாக சொல்லுவான்.

மந்திரி போய் அந்த குருடனை கூட்டிட்டு வந்தார். ராஜா சொன்னார். டேய் இது ஒரிஜினல் வைரமா.? போலி வைரமா.? இல்லன்னா ரெண்டும் கலந்து இருக்கான்னு பார்த்து சொல்லு.

அந்த குருடன் அந்த மொத்த வைரத்தையும் எடுத்து மத்தியான வெயில்ல கொண்டு போய் வெச்சான். கொஞ்ச நேரம் கழித்து அதை கையில எடுத்து பிரிச்சு ராஜா இதெல்லாம் வைரம். மற்றது எல்லாம் கண் ணாடி ன்னு பிரிச்சு கொடுத்துட்டான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கண் பார்வை அற்றவன் குருடன் அல்ல.
தன் குற்றங்களை உணராதவனே குருடன்.
~ காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிவபக்தனாகிய இராவணனை உரிமை கோருகிறது சிங்களம்

இலங்கைத் திருநாட்டை ஆண்ட இலங்கை வேந்தன் இராவணேஸ்வரன் மிகச் சிறந்த சிவபக்தன். திருக்கோணேஸ்வரத்தை அமைத்தவன் அவனே.

தவிர தன் தாயின் அந்திமக்கிரியையின் பால் கன்னியாவில் சப்த நதிகளின் பொருட்டு ஏழு கிணறுகளை வெட்டிவித்தான் என்பது வரலாறு.

இதுதவிர இராவணேஸ்வரன், கைலாய மலையைத் தன் தோள்புயத்தினால் நகர்த்த முற்பட்டவேளை, சிவப்பரம்பொருள் தன் பெரு விரலினால் மலையை அழுத்த, அதனால் நெருக்குற்ற இராவணன்; தன் ஒரு தலையை ஒடிந்து சாமகானம் இசைத்து சிவப்பரம் பொருளை மகிழ்வித்து தன்னை விடுவித்துக் கொண்டான் எனப் புராணங்கள் புகழுரைக்கின்றன.

இதிலிருந்து இராணவன் சிவனை வசமாக்கும் இசையை மீட்க வல்லவன் என்ற செய்தி வெளிப்படுகிறது.

இதற்கும் மேலாக சீதாப்பிராட்டியைக் கடத்தி வந்த இராவணேஸ்வரன் சீதைக்கு இம்மியும் கெடுதி நினைத்திலன்.

ஆம், சீதை அக்கினியில் இறங்கி தன் கற்பை நிரூபித்தபோது, இராவணனின் கற்பும் நிரூபிக்கப்பட்டது என்றான் ஒரு கவிஞன்.

ஆக, சீதையைக் கடத்திய குற்றம் தவிர்ந்து வன்மம் எதுவும் செய்யாத மன்னனாக இராவணன் இருந்தமையாலேயே இராவணன் மேலது நீறு என்று திருஞானசம்பந்த நாயனார் தன் திருநீற்றுப் பதிகத்தில் பாடிப் பரவினார்.

ஆம், *மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு* என்று திருமுறை பாடிய ஞானசம்பந்தர் *இராவணன் மேலது நீறு* எனப் படினாரெனில், அதற்குள் இலங்கை வேந்தன் இராவணேஸ்வரன் சிவன் மீது எத்துணை பக்தி கொண்டிருந்தான் என்ற உண்மை பதிவு செய்யப்படுகிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், சிவ பக்தனாகிய இராவணேஸ்வரன் சிங்களவர் என்று சிங்களப் பேரினவாதிகள் சிலர் உரிமை கோருகின்றனர்.

இங்குதான் இந்த நாட்டின் ஆதிக்குடிகள் தமிழர்கள் என்பதும் இங்கு தமிழர்களின் ஆட்சி நீண்ட நெடுங்காலம் இருந்ததென்பதும் நிரூபணமாகிறது.

இராவணேஸ்வரன் இலங்கை மன்னன் என்பதை அண்மையில் இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருந்தது.

இவ்வாறு இராவணேஸ்வரன் இலங்கையை ஆண்டான் என்பது ஏற்கப்படும் போது, இந்த நாட்டின் ஆட்சி தமிழர்களின் கைகளில் இருந்ததென்ற உண்மையை நிராகரிக்க முடியாமல் போகிறது.

இந்த இடத்தில்தான் எதுவும் செய்ய முடியாத சிங்களப் பேரினவாதம் இராவணன் ஒரு சிங்களவர் என்று கூறுகின்றது.

## சுவர்களுக்கு இடையே சிக்கிய மாணவி மீட்பு

(கொழும்பு)

களுத்துறை பிரதேசத்தில் பாடசாலை ஒன்றின் இரு சுவர்களுக்கு இடையில் சிக்கியிருந்த மாணவி தீவிர மீட்பு நடவடிக்கையின் பின்னர் மீட்கப்பட்டுள்ளார்.

களுத்துறை மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினர் இணைந்து ஹைட்ரோலிக் எரிவாயு மூலம் 2 சுவர்களுக்கு மிடையிலான இடைவெளியை அதிகரித்து மாணவியை காப்பாற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டாம் வகுப்பில் கல்வி கற்கும் இந்த மாணவி விளையாடும் பொழுது, இரண்டு சுவர்களுக்கிடையில் சிக்கியுள்ளார்.

எனினும், இதன்பின்னர் அவருக்கு வெளியே வருவது கடினமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர் பாடசாலை ஆசிரியர்கள் மாணவியை வெளியே எடுக்க முயன்றுள்ள போதிலும் அது சாத்தியமாகியிருக்கவில்லை.

இதனையடுத்து, களுத்துறை தீயணைப்பு படையினருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து, அவர்கள் அந்த மாணவியை மீட்டுள்ளனர். (ம-7)

### கல்வியங்காட்டில் ஆண் படுகொலை

## கைதான 6 பேரும் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு பகுதியில் ஆண்ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதான 6 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நேற்று நடைபெற்றது.

இதன்போது, குறித்த 6 சந்தேகநபர்களும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், அவர்களை எதிர்வரும் 24 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - கல்வியங்காடு பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து கடந்த இரு நாட்களுக்கு முன் ஆண் ஒருவரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டது.

உயிரிழந்தவர், கோப்பாய் பகுதியில் உள்ள சிறுமிஒருவருடன் முறையற்ற விதத்தில் நடந்து கொள்ள முற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து, அவரை சிலர் தாக்கி கொலை செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## ஆற்றில் மூழ்கிய இளைஞன் மரணம்

(நுவரெலியா)

ஆற்றில் தனது உறவினருடன் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஊவா பரணகம - ரத்தம்ப தியகொலராவ ஆற்றில் மூழ்கியே குறித்த இளைஞர் உயிரிழந்துள்ளார்.

நுவரெலியா, கந்தப்பளைப் பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞரே நேற்று முன்தினம் இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

நீரில் மூழ்கி உயிரிழந்த இளைஞரின் சடலம் ஊவா பரணகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

## யாழ். பல்கலையின் முகாமைத்துவ பீடாதிபதியாக

### பேராசிரியர் கெங்காதரன் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் புதிய பீடாதிபதியாக பேராசிரியர் ந.கெங்காதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதுவரைகாலமும் முகாமைத்துவகற்கைகள் வணிக பீட பீடாதிபதியாக பேராசிரியர் பா.நிமலதாசன் பதவிவகித்திருந்தார்.

அவரது பதவிக்காலம் நிறைவடையவுள்ள நிலையில் புதிய பீடாதிபதியாக பேராசிரியர் ந.கெங்காதரன் நேற்று தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## பாடசாலை மாணவி சடலமாக மீட்பு

(கொழும்பு)

கம்பஹாவில் பாடசாலை மாணவி ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கம்பஹா,கந்தானைப் பிரதேசத்தைச் சேர்ந்த எஸ்.பி.திலினி மாணவி, அவரின் வீட்டிலேயே நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இம்முறை உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருந்த நிலையிலேயே மாணவி உயிரிழந்துள்ளார்.

மரணத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை என்று தெரிவித்த பொலிஸார், பிரேத பரிசோதனையின் பின்னரே அது தொடர்பில் கூற முடியும் என்றும் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் உயிரிழந்த மாணவியின் பெற்றோரிடமும், சகோதரர்களிடமும் வாக்கு மூலங்களைப் பெற்ற பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## பிரசவத்தின் போது கீழே விழுந்த சிசு மரணம்

(அநுராதபுரம்)

பிரசவ நேரத்தில் பிரசவ அறையின் தரையில் வீழ்ந்த சிசு ஒன்று, அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளது.

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள கல்லஞ்சிய என்ற கிராமத்தைச் சேர்ந்த தாய் ஒருவர் தனது குழந்தை பிரசவத்துக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பிரசவ நேரத்தில், மருத்துவ ஊழியர்களால் குழந்தையைப் பிடிக்க முடியாமல் அது தரையில் வீழ்ந்துவிட்டதாக குழந்தையின் தந்தை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரேதப் பரிசோதனையில் குழந்தை கீழே வீழ்ந்துள்ளமை உறுதி செய்யப்பட்டது.

குழந்தையின் சடலம் மேலதிக விசாரணைகளுக்காக வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **புதன் கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** ஐஸ் தொழிற்சாலை-பொலிகண்டி, இலந்தைக்காடு, கணபதி ஆலை, கொற்றாவத்தை, நாச்சிமார் கோவிலடி பொலிகண்டி, நெடியகாடு, பொலிகண்டி ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

## பொலிஸ்மா அதிபரின் முகநூல் பக்கம் முடக்கம்

மேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தனது உத்தியோகபூர்வ முகநூல் பக்கம் சைபர் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அடையாளம் தெரியாதோர் தனது முகநூல் பக்கத்தை முடக்கியுள்ளதாக முறையிட்டுள்ளார்.

இந்தநிலையில் முகநூல் பக்கத்தின் கட்டுப்பாட்டை மீட்டெடுக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு

06

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



### தினசரி மின்வெட்டு

மின்சாரத்தை சேமிப்பதற்காக, நாடு முழுவதும் தினசரி மின் வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது. மின்வெட்டானது ஒரு நாளைக்கு ஐந்து மணி நேரம் முதல் ஏழரை மணி நேரம் வரை செயற்படுத்தப்பட்டது. பகல் நேரத்திலும், இரவு நேரத்திலும் மின்வெட்டு காரணமாக, தேர்வில் மாணவர்கள் சிரமத்துக்கு ஆளாக்கப்பட்டதோடு, இணைய வழி மூலம் கல்வி கற்கும் மாணவர்களின் கல்விக்கு இந்த மின்வெட்டுகள் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியது.

### பள்ளிகளில் நடத்தப்படவேண்டிய தேர்வுகள் ஒத்திவைப்பு

2022 மார்ச்சில், இலங்கையில் உள்ள பல பள்ளிகளில் நடத்தப்படவேண்டிய தேர்வுகள், நாடு முழுவதும் நிலவும் காகிதத் தட்டுப்பாடு காரணமாக காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டு மார்ச் 28 ஆம் திகதி நாடளாவிலான பருவத் தேர்வுகள் நடைபெறவிருந்தன. ஆனால் அச்சுத்தாள் மற்றும் மை நாடா ஆகியவற்றின் கடுமையான தட்டுப்பாடு காரணமாக, இயல்பு நிலை திரும்பும் வரை தேர்வுகளை முழுமையாக ரத்து செய்வது அல்லது ஒத்திவைப்பது என அப்போது முடிவெடுக்கப்பட்டிருந்தது.

### காகிதங்களின் விலை உயர்வு

இலங்கையில் அந்நிய செலாவணி நெருக்கடியால், செய்தித்தாள் அச்சிடுவதற்கான காகிதங்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்கு ஆகும் செலவுகள் அதிகரித்திருந்தன. இதனால், அச்சு ஊடகங்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகி இருந்தன. இந்நிலையில், விலைவாசி உயர்வு மற்றும் செய்தித்தாள் காகிதங்களின் தட்டுப்பாடு ஆகிய காரணங்களால், இலங்கையில் இருந்து வெளியாகும் "தி ஐலேண்ட்" ஆங்கில நாளிதழ், சனிக்கிழமை பதிப்பு வெளியீட்டை மட்டும் 2022இல் நிறுத்தி வைத்திருந்தது. இதேபோல், சிங்கள நாளிதழான திவயினவும் தன் வெளியீட்டை நிறுத்தியிருந்தது. இலங்கையில் உள்நாட்டுப் போரின்போது கூட, தி ஐலேண்ட் நிறுவனம், தன் பதிப்புகளை நிறுத்தாமல் தொடர்ந்து வெளியிட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

### பால் பண்ணைப் பொருட்கள், எரிபொருள், சமையல் வாயுத் தட்டுப்பாடு

அந்நிய செலாவணி கையிருப்பு குறைந்ததால், இறக்குமதி செய்யும் பொருட்களுக்கான தொகையை இலங்கையால் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் பால் பண்ணைப் பொருட்கள், எரிபொருள், சமையல் வாயு போன்றன பல நாட்கள் துறைமுகத்தில் காத்திருக்கும் நிலை ஏற்படுவதோடு இறக்குமதி செய்ய முடியாமல் வர்த்தகர்கள் தவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

22 மார்ச் 2022 அன்று, அத்தியாவசிய பொருட்களுக்காக வரிசையில் நிற்கும் மக்களிடையே பதற்றத்தைத் தடுக்கவும், எரிபொருள் விநியோகத்தை எளிதாக்கவும் பல்வேறு எரிவாயு மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இராணுவ வீரர்களை நிறுத்துமாறு அரசாங்கம் இராணுவத்திற்கு உத்தரவிட்டது. மணிக்கணக்கில் நீண்ட வரிசையில் நின்றதால் குறைந்தது 25 பேருக்கு மேல் உயிரிழந்துள்ளதாக பல்வேறு தகவல்கள் தெரிவித்திருந்தன. எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் ஏற்பட்ட தகராறில் ஒரு சிலர் கொல்லப்பட்டும் உள்ளனர்.

### இலங்கையில் கடன் நெருக்கடி இல்லை என சீன அறிஞர்களின் கருத்து

இலங்கையில் கடன் நெருக்கடி இல்லை என சீன அறிஞர்கள் வாதிட்டனர். இலங்கையில் அந்நிய செலாவணி பற்றாக்குறை நிலவுகிறதே தவிர, கடன் நெருக்கடி இல்லை என்று சீன சமூக அறிவியல் கல்வியகத்தின் இணைப் பேராசிரியரான ஜியா டுகியாங் தெரிவித்திருந்தார். குறிப்பாக, நாட்டின் பலவீனமான பொருளாதார கட்டமைப்பு, அரசாங்கத்தின் தவறான கொள்கைகள், சவால்களை சமாளிக்க அதன் இயலாமை, அத்துடன் பாதகமான வெளிப்புற காரணிகள் என்பனவே அந்நிய செலாவணி பற்றாக்குறைக்கான காரணம் என்று அவர் சுட்டிக்காட்டியிருந்தார். "அதிக வட்டிக் கடன்கள், ஹம்பாந்தோட்டை துறைமுகம் போன்ற சாத்தியமற்ற திட்டங்களில் ஊழல் நடந்ததாகக் கூறப்படுவது போன்ற விடயங்கள் தொடர்பில் அவர் கருத்துக் கூற வில்லை.

சகல டொலர்களையும் ராஜபக்ஷ குடும்பம் எடுத்துச் சென்றுவிட்டதாக கருதுவோரும் உள்ளனர்

இலங்கையின் இன்றைய நிலை பற்றி பொருளாதார வல்லுநர்களும் பொருளாதாரம் படித்தவர்களும் அனுபவ வாயிலாக பொருளாதாரம் பற்றி அறிந்தவர்களும் நன்றாக விளங்கிக்கொண்டிருப்பார்கள். ஆனால் சாதாரண பொதுமக்களுக்கு இது எவ்வளவு தூரம் விளங்கும் என்பது தெரியாது. சகல டொலர்களையும் ராஜபக்ஷ குடும்பம் எடுத்துச் சென்று விட்டதாக கருதுவோரும் உள்ளனர். சாதாரண மக்கள் இதனை எவ்வளவு தூரம் விளங்கியிருப்பார்களோ தெரியவில்லை.

இதனால் சாதாரண மக்களும் விளங்கிக்கொள்ளக்கூடியதாக பணவீக்கம் என்றால் என்ன, GDp, கடன்மதிப்பீடு, டொலர் ஏன் உலக நாணயமாக உள்ளது, கடந்த பல ஆண்டுகளாக டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி போன்ற விடயங்களும் இக் கட்டுரையில் ஆராயப்படுகிறது.

இன்று பல காரணங்களினால் இலங்கையின் கடன்மதிப்பீடும் (credit rating) மிகவும் கீழ் நிலையை அடைந்து விட்டது. இதனால் வெளிநாடுகளும் இலங்கைக்கு கடன் கொடுக்க தயங்குகின்றன. கடன்மதிப்பீடு என்றால் என்ன என்பதை இப்போது பார்ப்போம்.

### வாங்கிய கடனை திரும்பக் கொடுக்கும் திறன்- கடன் மதிப்பீடு (Credit Rating)

வாங்கிய கடனை திரும்பத் தரும் திறன் அல்லது தகுதி ஒரு தனி நபர் அல்லது நிறுவனத்திற்கு எந்த அளவுக்கு உள்ளது என்பதை ஆராய்ந்து கூறுவது கடன் மதிப்பீடு 'credit rating' என்பதாகும். Fitch, Moody's போன்ற பல நிறுவனங்கள் credit rating துறையில் உள்ளன.

ஒரு நாட்டின் நிதி சந்தையில் பல நிறுவனங்கள் கடன் பத்திரங்களை விற்பனைக்கு வெளியிடுகின்றன. அந்த நிறுவனங்களின் நிதி நிலைமைகளை முழுவதுமாக ஒவ்வொருவரும் தெரிந்து கொள்வது இயலாத காரியம். இந்த சூழலில் credit rating நிறுவனங்களின் பங்கு முக்கியத்துவம் பெறுகிறது.

ஒரு நிறுவனம் எதற்காகக் கடன் வாங்குகிறது, அக்கடன் தொகை சரியாக முதலீடு செய்யப்படுமா? அவ்வாறு முதலீடு செய்தால் அதில் உள்ள ஆபத்து (risk) என்ன? எதிர்பார்க்கபட்ட லாபம் வருமா? இதுவரை அந்நிறுவனம் வாங்கிய கடன்களை எவ்வாறு திருப்பி செலுத்தியுள்ளது இது போன்ற பல கேள்விகளுக்கு பதில் தரக்கூடிய வகையில் credit rating நிறுவனத்தின் அறிக்கை இருக்கும்.

ஒரு கடன் பத்திரத்தை தர நிர்ணயம் செய்தபிறகு, அந்தக் கடன் பத்திரத்தின் முதிர்வு காலம் வரை தர நிர்ணயம் தொடர்ச்சியாக நடைபெறும். இந்த தர நிர்ணயம் ஒரு கடன் பத்திரத்தை வாங்குவதற்கான பரிந்துரை அல்ல என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

தனியார் நிறுவனங்கள் மட்டுமல்லாது, அரசு வெளியிடும் கடன் பத்திரங்களையும் தர நிர்ணயம் செய்வது credit rating நிறுவனங்களின் வேலை. மேலும் credit rating நிறுவனங்கள் கொடுக்கும் தரத்தின் அடிப்படையில்தான் முதலீடு செய்யவேண்டும் என்ற கட்டுப்பாட்டைக் கூட சில அரசு மற்றும் தனியார் நிதி முதலீட்டு நிறுவனங்கள் ஏற்படுத்தியுள்ளன.

credit rating நிறுவனங்கள் சுதந்திரமாகவும் திறமையாகவும் செயற்பட வேண்டும் என்பதை சொல்லித்தெரிய வேண்டியதில்லை. credit rating நிறுவனங்களுக்கும் கடன் வாங்கும் நிறுவனங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும். அப்போதுதான் credit rating நிறுவனங்கள் மற்ற நிறுவனங்களின் நிதி பற்றிய முழு விபரங்களையும் ஆராய்ந்து அறிக்கை வழங்க முடியும். இதனாலேயே, இந்த credit rating நிறுவனங்கள் மீது நேர்மையின்மை, தகுதியின்மை போன்ற குற்றச்சாட்டுகள் அவ்வப்போது கூறப்படுகின்றன.

நல்ல rating உள்ள நாடு அல்லது நிறுவனத்துக்கு எவ்வளவு வேண்டுமானாலும் கடன் தர உலக நிதி அமைப்புகள் முன் வரும்.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமுர்த்தி வங்கி...

முகாமையாளரான கோப்பாய் தெற்கைச் சேர்ந்த கௌரிமலர் (வயது-52) என்பவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33,104)

## விஷ ஜந்து...

கடமை நிமிர்த்தம் மடுத் திருவிழாவுக்குச் சென்ற நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு திடீரென ஏற்பட்ட சுகயீனம் காரணமாக மடு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் குறித்த இளைஞன் உயிரிழந்துள்ளார்.

இந்த நிலையில் சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு நேற்று திங்கட்கிழமை காலை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது அவரது உடலில் விஷம்பரவியதன் காரணத்தினாலேயே மரணம் சம்பவித்துள்ளதாகவும் சடலப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது. (ம-7,285)

மெகா பவர்
திகதி 14/08/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1554
L 11 04 56 72 75
75625

தன நிதானய
திகதி - 2023.08.14
சீட்டிழுப்பு இலக்கம் - 1236
S 08 12 18 22 S
21317

Lucky 7
திகதி 14.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0032
L7 இலக்கம் 2 5
வெற்றி இலக்கினம் மகரம்
வெற்றி இலக்கங்கள் 8 5 2 9 6 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3448
சீட்டிழுப்பு திகதி 14.08.2023
S 06 20 40 73
S 15154
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.08.14
சீட்டிழுப்பு இலக்கம் 515
கும்பம் 10 29 45 46 கும்பம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/08/14
சீட்டிழுப்பு இலக்கம் 5206
P 8 1 2 9 8 5
தேசிய லொத்தர் சபை

## நெற்பயிர்களை...

அறிவித்துள்ளது.

நெற்பயிர்களுக்கு தீ வைப்பது சட்டவிரோதமானது எனவும், அண்மைய நாட்களில் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் ஊடகங்கள் வாயிலாக அறியக் கிடைத்ததாகவும் கமநல காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், வறட்சியால் நெற்பயிர்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான மதிப்பீடுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## சமஷ்டியில்தான்...

மல் - அரசமைப்பில் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் விரைவாக நடைமுறைப்படுத்தவும் - நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தலை நடத்தவும் - நாம் விபரித்துள்ளபடி, தமிழ் மக்களின் அபிலாஷைகளின் அடிப்படையிலும் மற்றும் தொடர்ந்து வந்த அரசுகளால் தீர்வுக்காக வழங்கப்பட்ட பல்வேறு உறுதிமொழிகளுக்கு இணங்கவும் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நடவடிக்கையை விரைந்து முடிக்கவும் ஜனாதிபதியாகிய தங்களைக் கோருகின்றோம்."

சுதந்திரம் பெற்ற காலம் முதல் - குறிப்பாக 1956 முதல் - தமிழர்கள் சமஷ்டி அடிப்படையான தீர்வே தங்கள் அபிலாஷை என்பதை எல்லாத் தேர்தல்களிலும் மாறாமல் வலியுறுத்தி வந்திருக்கின்றார்கள் என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இடையில் அவர்கள் தனிநாட்டு கோரிக்கையையும் கூட வலியுறுத்தினர் என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அர்த்தமுள்ள எந்தத் தீர்வும் சமஷ்டி அடிப்படையில் அமைய வேண்டும் என்பது இந்தக் கடிதத்தில் விபரிக்கப்பட்டுள்ளது.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினை மற்றும் அவர்களின் நியாயமான அபிலாஷைகள் தொடர்பில் கடந்து வந்த ஒவ்வொரு அரசுகளும் அளித்த வாக்குறுதிகள் மற்றும் முயற்சிகள் இந்தக் கடிதத்தில் விபரிக்கப்பட்டுள்ளன.

1983 முதல் இந்த விடயத்தில் இந்தியா வழங்கி வரும் பங்களிப்பும் இதில் விபரிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் அடிப்படையில், தமிழ் மக்களின் அபிலாஷைகளின் உட்கிடைக்களைப் புரிந்து கொண்டு, அவற்றுக்கு இணங்கவும், பல்வேறு அரசுகள் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் காலத்துக்கு காலம் வழங்கி வந்த உறுதிமொழிகளைக் கவனத்தில் எடுத்தும் தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நடவடிக்கையை விரைந்து முடிக்குமாறு சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார். (ம-7)

## குருந்தூர்மலை...

திரண்டு வருமாறும் குருந்தூர்மலை பொங்கல் உற்சவ ஏற்பாட்டு குழுவினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் பொங்கல் உற்சவம் ஒன்றினை ஆதி ஐயனார் ஆலயத்திலே செய்ய முற்பட்ட வேளை தொல்லியல் திணைக்களத்தினாலும், சகோதர மொழி பேசுபவர்களாலும் தடுக்கப்பட்ட சம்பவம் பதிவாகியது.

அது தொடர்பாக நகர்த்தல் பத்திரம் ஊடாக அந்த விடயத்தை நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு சென்று கடந்த (08.08.2023) வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதில் அது தொடர்பாக பதிலளிப்பதற்காக தொல்லியல் திணைக்களத்திற்கு தவணை வழங்கப்பட்டிருந்தது.

அன்றையதினம் தொல்லியல் திணைக்களம், சட்டமா அதிபர் திணைக்களத் தினுடைய அரச சட்டத்தரணி ஊடாக தோன்றி தாம் எந்தவிதத்திலும் அங்கே சைவ மக்கள் பொங்கல் பொங்கி வழிபடதடை செய்ய இல்லை என்றும், எதிர்காலத்திலும் அவ்வாறான பொங்கல் நிகழ்வு நடைபெற்றால் அதற்கு பாதகமாக நடக்க மாட்டோம் என்றும் கூறியிருந்தார்கள்.

இந்நிலையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை குருந்தூர்மலை ஆதி ஐயனார் ஆலயத்தில் பொங்கலினை மேற்கொள்ளவுள்ளதாக நீதிமன்றத்தில் வழக்கு தொடுநர்களால் அனுமதி பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7,299)

## நாட்டுக்கு...

பாத்ததும்பர பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கூட்டணியை அமைத்துள்ளோம்.

இருப்பினும் ஜனாதிபதியின் அரசியல், பொருளாதார கொள்கைக்கும், எமது அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கைக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.

69 இலட்ச மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சி மாற்றத்தை தோற்றுவித்தார்கள்.

பொய்யான போராட்டத்தால் துரதிஷ்டவசமாக மக்களாணை பலவீனப்படுத்தப்பட்டது.

ராஜபக்ஷர்கள் மீது மக்கள் கொண்ட நம்பிக்கையைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக பாராளுமன்றத்தின் ஊடாக அரசியலமைப்புக்கு அமைய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம்.

போராட்டத்துக்கு முகம் கொடுத்த அனுபவம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உண்டு.

நெருக்கடியான சூழலில் அரசாங்கத்தை பொறுப்பேற்க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்வரவில்லை.

ராஜபக்ஷர்கள் மீது மக்கள் கொண்ட நம்பிக்கையை பாதுகாப்பதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம்.

நாட்டுக்கு எதிரான அரசியல் தீர்மானங்களை ஜனாதிபதி எடுத்தால் அதை கடுமையாக எதிர்ப்போம் என்பதை உறுதியாக குறிப்பிட்டுக் கொள்கிறோம் என்றார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2180 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.08.14 தினம் திங்கட்கிழமை
11 24 33 34 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,963,684.40
02 16 37 66 W
DLB

சனிதா
திகதி 2023.08.14 வெற்றி வாரம் 4341 வர்ணம் இளம் நீலம்
10 14 38 62 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,231,392.00
08 23 37 39 R
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3892 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.08.14 தினம் திங்கட்கிழமை
05 25 48 58
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,935,080/-
01 17 34 36
DLB

கப்ருக
திகதி 14.08.2023 வெற்றி வாரம் 1356 வர்ணம் பசுமை
B 04 08 41 45 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.428,098,694.20
37 44 63 72 G
DLB
www.dlb.lk

ஜயோதா
திகதி 2023.08.14 வெற்றி வாரம் 1947 வர்ணம் செம்மஞ்சள்
09 27 56 60 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.45,412,455.20
03 08 26 50 P
DLB

அத கோட்டிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2006
சீட்டிழுப்பு திகதி : 2023.08.14
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 50,444,072/-
07 32 47 65 J
04 11 60 61 M
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LIVE SEMINAR
## AT JETWING HOTEL, JAFFNA

ON 17 TH
AUGUST 2023
AT 3.30 PM - 6.00 PM



STUDY MBBS/ MD
IN CHINA/ BELARUS
WITH OR WITHOUT
A/L RESULTS

SLMC Recognized
Medical Universities
100% English Medium

BYF EDUCATION (PVT) LTD
CALL ON WHATSAPP TO RESERVE YOUR SEATS!
(16716) DR.DEVA (SLMC REGISTERED DOCTOR)
WHATSAPP - 0094772177995
WWW.BYFEDULK.COM


## மாகாண...

சபைத் தேர்தலை அரசாங்கம் முதலில் நடத்த வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல். பீரிஸ் வலியுறுத்தினார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே இவர் இவ்வாறு குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மாகாணசபைகளுக்கு பிரதிநிதிகள் நியமிக்கப்படும்வரை ஆளுநர்களுக்கு ஆலோசனைகளை வழங்க, ஆலோசனைசபையொன்றை ஸ்தாபிக்க வேண்டும் என்று அரசாங்கம் கூறியுள்ளது.

ஆளுநர்களுக்கு அறிவுரை வழங்க ஆலோசனை சபையை நிறுவுவதை விட, மாகாணசபைகளுக்கு மக்கள் பிரதிநிதிகளை முதலில் நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மக்கள் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட ஒரு உறுப்பினர்கூட, ஒன்பது மாகாணங்களுக்கும் இன்று இல்லை. மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு அதிகாரத்தை பகிர்ந்தளிக்க வேண்டும் என்பதே 13 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

எனவே, மாகாணசபைத் தேர்தலை முதலில் நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவர்கள் ஜனாதிபதித் தேர்தலை ஒருபோதும் முன்கூட்டியே நடத்த மாட்டார்கள். எனினும் உரிய நேரத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தியே ஆக வேண்டும் என்றார். (ம-7)

# குளவி கொட்டியதில் முதியவர் உயிரிழப்பு

மானிப்பாயில் குளவி கொட்டுக்கு இலக்கான முதியவர் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இதில் நவாலி வடக்கு, மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த நடராசா சந்திரமோகன் (வயது 70) என்பவரே உயிரிழந்தவராவார். குறித்த முதியவர் காணி ஒன்றினை துப்பரவு செய்து கொண்டிருந்த வேளை குளவி கொட்டுக்கு இலக்காகி இறந்துள்ளார்.

இவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7.104)

## நாட்டின்...

வும், நாட்டின் வளங்கள் 24 மணி நேரமும் விற்கப்படுகின்றன. இது அரசாங்கத்தின் கொள்கையாக இருந்து வருவதாகவும், ரூபவாஹினி நிறுவனத்திற்கு சொந்தமான ஐ சேனலை விற்கவோ அல்லது குத்தகைக்கு விடவோ தயாராகி வருவதாக கூறப்படுவதாகவும், புதிய முதலீட்டாளர்களை அரச ஊடகங்களுடன் இணைக்கும் ஒழுங்கு முறை உள்ளதாகவும், ரூபவாஹினி கூட்டுத்தாபனம் தமது சொந்த சொத்தைப் போல, தான் நினைத்தது போல, நினைத்த நபர்களுக்கு விற்கும் சூதாட்டம் அரங்கேறி வருவதாகவும் எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் வளங்களை விற்கும் சூதாட்டத்திற்கு எதிராக நாம் எழுந்து நிற்க வேண்டும் என்றும், நாட்டின் வளங்களும், நாட்டின் சொத்துக்களும் யாருடைய தனிச் சொத்து அல்ல என்றும், மக்களின் வளங்களைக் கையாளும் போது வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும் என்றும், கொள்முதல் முறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்றும், ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் மீண்டும் இந்த சட்ட விரோத ஏலங்கள் கையகப்படுத்தப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ம-7)


**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் காங்கேசன் துறையில் 9 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
K.K.S - தொண்டைமானாறு கரையோர வீதியில் இருந்து 3 ஆவது காணி (16666)
074 234 3241

**VISA விண்ணப்பங்கள்**

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
✔ ONLINE APPLICATIONS
✔ VISA APPOINTMENTS
✔ PASSPORT APPLICATION
✔ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
VISA
STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்.
(C-7067)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

**WORK IN UK**
WORK PERMITS
CONSTRUCTION WORKERS
➤ 5 YEAR WORK PERMITS
➤ குடும்பத்தவர்களை உடன் அழைத்துச் செல்லும் வாய்ப்பு
➤ 5 வருடங்களின் பின் நிரந்தர வதிவிட உரிமை (Permanent Resident)
✔ BRICK LAYERS ✔ SHUTTERING CARPENTERS
✔ SHUTTERING JOINERS ✔ STEEL FIXERS
✔ ELECTRICIANS ✔ PLUMBERS
✔ STEEL ELECTORS FOR STRUCTURES
போன்ற துறைகளில் வேலைசெய்பவர்களுக்கு பொருத்தமான உடனடி வேலை வாய்ப்புகள்
(C-7067)
CIMS COLLEGE 0777-068-777

**VILLAGE HOTEL JAFFNA EXPRESS**
யாழ் - கொழும்பு பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பஸ் சேவை இனி வரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில்...
கட்டணம் - 2800/=

(16349)
T.P: 077 544 8503


# மரண அறிவித்தல்

மண்ணில்
12 - 12 - 1971



விண்ணில்
14 - 08 - 2023

## சங்கரப்பிள்ளை சிவகுமார்

(அபிவிருத்தி உத்தியோகத்தர், பதில் கடற்றொழில் பரிசோதகர், அகில இலங்கை சமாதான நீதவான், மொழி பெயர்ப்பாளர் தமிழ் – சிங்களம், சிங்களம் – தமிழ், சிங்கள போதனாசிரியர் – அரச கருமமொழி திணைக்களம்)

சாரையடி, புலோலியைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சிவகுமார் அவர்கள் நேற்று (14.08.2023) திங்கட்கிழமை உடுப்பிட்டியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் அமரர் கந்தசாமி - செல்லபாக்கியம் தம்பதியரின் மருமகனும் வனஜா(அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கரவெட்டி) அவர்களின் அன்புக் கணவரும் அனோஜன்(மாணவன், யா/ஹாட்லிக் கல்லூரி), அட்சயன்(மாணவன், ஹாட்லிக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவசங்கரின் அன்புச் சகோதரனும் மோனரூபி, உமாதேவி (லண்டன்), சந்திரகுமார்(லண்டன்), கிரிஷா(லண்டன்), யசோதா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் பிரபாகரன், பவானிதேவி, இராஜகுமார், ஜெயராசா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (16.08.2023) புதன்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கரம்பவாளி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் -
குடும்பத்தினர்
(C-7066)

# மரண அறிவித்தல்

தோற்றம்
19 - 05 - 1963



மறைவு
13 - 08 - 2023

## இரத்தினம் சரஸ்வதி

புலோலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இரத்தினம் சரஸ்வதி அவர்கள் 13.08.2023 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் மனைவியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சிவகாமி தம்பதியரின் மருமகளும் நளினி (ஜேர்மனி) ரோகீசன் (கிருஸ்ணா அரிசி ஆலை உரிமையாளர்) ரகுகரன் (ஜேர்மனி), கோசலை, நளாயினி ஆகியோரின் பாசமிகு தயாரும் கபிசன் (ஜேர்மனி), சிவநந்தன் (பிருந்தா அரைக்கும் ஆலை- உரிமையாளர்) ஆகியோரின் மாமியாரும் அனந்திகா (ஜேர்மனி), பிருந்துஷா, யஸ்விகன் ஆகியோரின் அம்மம்மாவும் விஜயலட்சுமி, காலஞ்சென்ற வரலட்சுமி மற்றும் கமலாதேவி, ஏரம்பநாதன்(ஆசிரியர் உடுப்பிட்டி அ.மி. கல்லூரி) ஆகியோரின் சகோதரியும் தங்கம்மா, பாக்கியம், நவரத்தினம், மகேஸ்வரி காலஞ்சென்றவர்களான ராஜேஸ்வரி, கிருஸ்ணானந்தன், யோகராசா, சாமிநாதன், தங்கவேலோன் மற்றும் மலரேஸ்வரி(ஆசிரியை, யா/பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.08.2023 புதன்கிழமை பி.ப 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.இல. : 076 103 6001
076 244 1081

தகவல் -
குடும்பத்தினர்
(C-7066)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org